ஓம் ஸ்ரீ அகத்தீசர் துணை

# மகான் மாணிக்கவாசகர் அருளிய

# தவநூல்

**பரமானந்த சதாசிவ சற்குரு**

**தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**


**நிறுவனர்,**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**

ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.

தொலைபேசி 04327–255684.

Homepage : www. agathiar.org



வெளியீடு : 16–04–2003 சித்ரா பௌர்ணமி விழா


## நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூல் | : | மகான் மாணிக்கவாசகர் அருளிய தவநூல் |
| முதற்பதிப்பு | : | 16–04–2003 சித்ரா பௌர்ணமி தீட்சைவிழா |
| வெளியீடு | : | ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,<br>ஓங்காரக்குடில், துறையூர் – 621 010.<br>திருச்சி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.<br>தொலைபேசி 04327–255684, 255184, 255784. |
| அச்சிட்டோர் | : | வாஞ்சி மறுதோன்றி அச்சகம்,<br>துறையூர் – 621 010.<br>தொலைபேசி 04327–243638. |


அகத்தியர் துணை

பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அருளிய**

## <u>வீடுபேறு அடையும் வழி</u>

குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு
அருவமாய் நிற்கும் சிவம். – ஔவைக்குறள்.

தானமும் தவமும் தான்செய்வாராகில்
வானவர் நாடு வழிதிறந்திடுமே. – ஔவைக்குறள்.

விடுபேறு அடைய விரும்புகின்றவர்கள் சைவ உணவை மேற்கொண்டும், ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்தும், தினசரி காலை 5 மணியளவில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, உதயகாலத்தில் ஒரு தீபம் ஏற்றி நறுமணம் உள்ள பத்தியை வைத்து சமமான இடத்தில் ஒரு வெண்ணிறத்துணியில் அமர்ந்து **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று 10 நிமிடம் நாமஜெபம் செய்தும், சாஸ்டாங்கமாக விழ்ந்து வணங்கியும், மாணிக்கவாசகர் அவர்களே! என் அகமும் புறமும் நீர் இருந்து அருள் செய்ய வேண்டுகிறேன். நான் எந்த செயல் தொடங்கினாலும் எனக்கு இந்த செயல் பாவம் என்றும், இந்த செயல் புண்ணியம் என்றும் உணர்த்த வேண்டும். அப்படி உணர்த்தினால்தான் எனக்கு தீவினை சூழாமல் இருக்கும். எனக்கு செல்வநிலை பெருகவும், மாதம் இருவருக்கோ அல்லது ஐவருக்கோ அன்னதானம் செய்வதற்குரிய வாய்ப்பையும் நீரே எனக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். நான் பேசும்போது பிறர்மனம் புண்படும்படி பேசாமல் இனிமையாகப் பேசவேண்டும்.

அடுத்து, என் தாய்தந்தையிடத்தும், மனைவி மக்களிடத்திலும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். விருந்தை உபசரிக்கின்ற பண்பு எனக்கு வரவேண்டும். வீண் ஆடம்பரங்களில் கவனம் செலுத்தாமல் இருக்க வேண்டும். எதிலும் சிக்கனத்தை கடைப்பிடிக்கவும், தேவையில்லாத காரியங்களில் கவனம் செலுத்தாது இருக்கவும் அருள்செய்ய வேண்டும்.

தினமும் காலை மாலை 10 நிமிடமும், இரவு நடுஜாமத்தில் 10 நிமிடமும் உமது திருநாமத்தைச் சொல்லி பூஜை செய்வதற்குரிய அறிவும் பரிபக்குவமும் ஆர்வமும் தரவேண்டும். தினமும் உமது திருவடியைப் பூஜிக்காமல் ஜென்மத்தைக் கடைத்தேற்ற முடியாது என்னும் அறிவு எனக்கு வேண்டும். மேலும், என் உணர்வோடும், உணர்ச்சியோடும் நாடிநரம்புகளில் நீர் கலந்து எனக்கு அருள் செய்ய வேண்டும்.

உமது ஆசிபெற வேண்டுமென்றால், புண்ணியபலமும், அருள்பலமும் வேண்டும். அதைப் பெறுவதற்கு நீரே எனக்கு அருள்செய்ய வேண்டும். உமது திருவருள் துணை கொண்டுதான் புண்ணியத்தையும் அருளையும் பெறமுடியும் என்ற உணர்வு எனக்கு வேண்டும்.

பிராணாயாமம் அல்லது யோகப்பயிற்சியில் ஈடுபடும்முன் உமது திருவடியைப் பூஜித்தபின்தான் செய்ய வேண்டும் என்று எனக்கு உணர்த்தவேண்டும். உமது திருவருள் துணையில்லாமல் பிராணாயாமம் அல்லது யோகம் செய்தால் மலச்சிக்கல், இரத்த அழுத்தம், குடல் புண் மற்றும் பல்வேறு நோய்கள் வந்து இறக்க நேரிடும் என்பதை எனக்கு உணர்த்த வேண்டும்.

பக்தி இல்லாமல் யோகம் செய்தால் சித்திபெற முடியாது என்பதை எனக்கு நீர் உணர்த்த வேண்டும். எனவே, என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் உமது திருவடிக்கே அர்ப்பணிக்கிறேன். நாயினும் கடையேனாகிய என்னையும் ஒரு பொருட்டாக மதித்து என்னை ஏற்று அருள்செய்ய வேண்டும் என்று உமது திருவடி பணிந்து வேண்டிக்கொள்கிறேன். உமது திருவடியை கணக்கில் அடங்கா பஞ்சமா பாவிகள் பூஜித்து பாவத்தையும் தீர்த்திருக்கிறார்கள், புண்ணியமும் பெற்று வீடுபேறும் அடைந்திருக்கிறார்கள்.

எனவே, என்னைப்போன்ற பாவியை மன்னித்து எனக்கும் வீடுபேறு அடைய அருள்செய்ய வேண்டுகிறேன். நான் பிராணாயாமம் செய்யும் காலத்தில், எனது மூச்சுக்காற்றோடு கலந்து என்னுள் இருந்து மூச்சுக்காற்றை இயக்கவேண்டும். அப்படி இயக்கினால்தான் இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய இரகசியத்தை நான் அறிந்துகொள்ள முடியும். எனவே, வீடுபேறு அடைய உமது திருவடியை வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : மகான் மாணிக்கவாசகர் நமக்கு மனமுவந்து அருளவேண்டும் என்றால், **வாய்மையே, தூய்மையே, தாயநிதியே, தேவாதிதேவா, திவ்யகுணசாந்தமே, மெய்ஞானபோதமே, கேட்பதெல்லாம் தரும் தாயே எனக்கும் அருள்செய்ய வேண்டும்** என்று வேண்டவேண்டும்.

திக்கெல்லாம் புகழ்வாய்ந்த

## மகான் திருமூலதேவர் அருளிய திருமந்திரம்

## திருவடிப்பேறு

திருவடி – திருவருள். கால் என்பது குண்டலினி சத்தி. அது சிரசை நோக்கிப் பாய்வதே அருள். அவ்வாறு சிரசின்மேல் பொருந்தியிருப்பதே திருவடிப்பேறு. மந்திரம் 2425, 2426.

**எடுத்துக்காட்டு**

காலுந் தலையும் அறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே. 2425.

**பதப்பொருள்** : காலும் தலையும் அறியார் கலதிகள்–காலும் தலையும் எவை என்பதை வீணர்கள் அறியவில்லை. கால் அந்தச் சத்தி – கால் என்பது அக்குண்டலினி சத்தியாகும். அருள் என்பர் காரணம் – மூலாதாரத்தில் குண்டலினி விளங்குவதற்குக் காரணம் அருள் என்று கூறுவர். பாலொன்று ஞானமே பண்பார் தலை – ஒளி விளங்கும் ஞானமே பண்பு நிறைந்த தலையாகும். உயிர் கால் அந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே – சத்தியானது அந்த ஞானமாகிய சிவத்தைக் காட்ட உயிர் வீடுபெறும்.

**விளக்கம்** : கால் – அடி. தலை – சிரசு. காலும் தலையும் அறியாமையாவது, மூலாதாரத்திலுள்ள குண்டலினி சத்தி ஊர்த்துவ கதியாக மேலே சிரசுக்கு செல்லும் உபாயத்தை அறியாமை. அருள் காரணமாவது உபாயத்தை அறிந்து செய்வதோடு அருளும் துணைக்காரணம் என்பது. பால் – வெண்மை. **பாற்றிரு நீற்றெம் பரமனை** என்ற திருவாசக அடியால் இப்பொருளை உணர்க. கால் அந்த ஞானத்தைக் காட்டலாவது, மூலாதாரத்தில் சுழுமுனையில் விளங்கும் குண்டலினி சிரசுக்கு சென்று நாதத்தை உதிக்கச் செய்தல்.

**காலுந் தலையு மறிந்து கலந்திடில்**
**சாலவும் நல்லது தான்.** ஔவைக்குறள்

**கருத்து :** குண்டலினி ஊர்த்துவ கதியை அடைந்து ஞானத்தைக் காட்ட முத்தி கிட்டும்.

**தலையடி யாவ தறியார் காயத்தில்**
**தலையடி யுச்சியில் உள்ளது மூலந்**
**தலையடி யான அறிவை யறிந்தோர்**
**தலையடி யாகவே தானிருந் தாரே. 2426**

**பதப்பொருள் :** தலை அடியாவது அறியார் காயத்தில் – உடம்பில் அடியானது சிரசில் வந்து பொருந்துவதை வீணர்கள் அறியவில்லை. தலை அடி உச்சியில் உள்ளது மூலம் – தலை உச்சியிலும் அடி மூலாதாரத்திலுள்ள குண்டலினி சிரசை அடைந்து பொருந்தும் அறிவை அறிந்த ஞானியர், தலை அடியாகவே தான் இருந்தாரே – சிற்றறிவு நீங்கிப் பேரறிவாக இருந்தனர்.

**கருத்து :** மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினியைச் சுழுமுனை உச்சியில் விளங்கும் சிவத்துடன் சேர்க்கும் உபாயம் அறிந்தோர் பேரறிவாய்த் திகழ்வர்.

1. **இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே**
   **பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்**
   **சிவந்த குருவந்து சென்னிகை வைக்க**
   **உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே. 1590.**

இசைந்தெழும் அன்பில் எழுந்தபடியே – திருவருளால் இறைவனைப் பொருந்த எழுகின்ற அன்பின் வழியே. பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏக – அன்பை ஆதாரமாகக்கொண்டு வெளிப்படுகின்ற இறைவனை இறவா இன்ப அன்பில் பற்ற. சிவந்த குருவந்து சென்னி கைவைக்க – செவ்வொளியானது மேல்நோக்கி ஏறுதலைச் செய்து சிரசில் படர. உவந்த குருபதம் உள்ளத்து வந்ததே – விரும்பிய திருவடி உள்ளத்தே இன்பமாய் நிறைந்தது.

பசைதல் – அன்புகொள்ளுதல். சென்னி கை வைத்தலாவது – மூலாதாரத்திலும் சுவாதிட்டானத்திலும் உள்ள சக்கரங்கள் செவ்வொளியுடன் கூடியவை. சிவத்தைச் சிந்திக்கச் சிந்திக்க சுவாதிட்டானத்திலுள்ள உணர்வானது மூலாதாரம் சென்று பிடரிக்கண் வழியாகப் பிரமரந்திரம் அடையும். அப்போது குருமண்டலம் விளங்கி ஓர் ஆனந்தம் உண்டாகும். இதுவே சென்னி கை வைத்தல்.

**சீருடைப் செங்கம லத்தில் திகழுருவாகிய செல்வன்**
**பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம றுத்தெனை யாண்ட**
**ஆருடை யம்பொனின் மேனி அமுதினை நீவரக் கூவாய்.**
**திருவாசகம் – 354.**

அன்பினால் இறைவனைச் சிந்தித்தால் சிரசின்மீது உணர்வு பெருகி இன்பம் உண்டாகும்.

**2. தாடந்த போதே தலைதந்த எம்மிறை**
**வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு**
**விடந்த மின்றியே யாள்கென விட்டருட்**
**பாடின் முடிவைத்துப் பார்வந்த தந்ததே. 1591.**

தாள் தந்த போதே – இறைவன் திருவருளை நல்கியபோதே. தலைதந்த எம்மிறை – பொறி புலனுக்கு அடிமையாகக் கிடந்த எனக்கு ஞானத்தைக் கொடுத்த எம் தலைவன். வாள் தந்த ஞான வலியையுந் தந்திட்டு – ஞானவாளை உதவி அஞ்ஞானத்தை வேறுபடுத்தும் திறமையும் கொடுத்து. விடு அந்தமின்றியே ஆள்கென விட்டு – வீட்டுலகை முடிவில்லாக் காலம் ஆள்வாயாக என அருளி, அருட்பாடு இன்முடி வைத்து, பார் வந்து தந்ததே – பூமி தத்துவம் என்ற சுவாதிட்டானத்தில் வந்து அருட்சத்தியை இன்பமாக என்னுடைய சிரசில் பதித்தனன்.

தாள் தந்த போதே – குண்டலினிசத்தி சிரசை அடைந்தபோதே. பார் வந்து தந்தது – பூமி தத்துவத்தில் தொழிற்படும் காம வாயு மேல்முகம் கொண்டு எழுந்தபோது அழியும் உடலை அழியாத உடலாக அமைக்க உதவுவது.

திருக்கோயிலில் சிறப்பு வழிபாட்டில் கொடியை ஏற்றி வழிபடும் பொருளும் இதுவே.

இறைவன் திருவருள் பெற்றபின் அஞ்ஞானம் நீங்கி வீட்டுலகம் கிட்டியது.

**3. தானவ னாகிச் சொரூபத் துவந்திட்டு**
**ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின**
**ஏனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி**
**தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே 1592.**

தான் அவனாகிச் சொரூபத்து வந்திட்டு – என்னைச் சிவம் வந்து ஆட்கொண்டு அவனாகச் செய்தபோது. ஆன சொரூபங்கள் நான்கும் அகற்றின – சிவ சொரூபமாக நான் ஆனபோது முன்னர் சிவமாக விளங்கிய பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன் ஆகிய நான்கு சொரூபங்களும் என்னைவிட்டு அகற்றப்பெற்றன. ஏனைய முத்திரை ஈந்தாண்ட – இதர அடையாளங்களான அருவச்சதாசிவர், விந்து, நாதம், சத்தி ஆகியவைகளை என்னிடம் சிறப்பாக விளங்கும்படிச் செய்து. நன்நந்தி தானடி முற்சூட்டித் தாபித்தது உண்மையே – தனது திருவருளை முன்னமேயே பெற்றவன் என்ற உண்மையைத் தாபித்தருளினன் நந்தி.

இந்நெறி பற்றியோர்க்கு அணு சதாசிவர் பதம் கிட்டலால் தூல உருவில் விளங்கும் நான்கு மூர்த்தங்களையும் கடந்து விளங்குவர்.

திருவருளைப் பெற்றவர் சிவசொரூபம் பெறுவர்.

**4. உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்**
**திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்**
**கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த**
**சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. 1593**

உரையற்று உணர்வற்று உயிர்பரம் அற்று – அநுபவ நிலையில் பேச்சற்று, உணர்வு கெட்டு, தான் என்ற நிலை அறியாது. திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்து – தெளிந்த நீர்போல அசைவின்றியிருக்கும் சிவமாந் தன்மையும் கெட்டு. கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த – சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆகிய நான்கு வாக்கினால் உதிக்கும் நாதத்தைக் கடந்த எல்லையற்ற. சொரூபத்து

இருத்தினன் – தனது சொரூபத்துடன் ஒன்றாக்கினன். சொல் இறந்தோமே – அதனால் பிறப்பு இறப்புக்கு எல்லையான பிரணவத்தைக் கடந்துவிட்டோம்.

துரிய பூமியில் விந்து நாதங்களைக் கண்டு அதில் இன்புற்றிருப்பார்க்குத் தான் உளன் என்ற ஓர் எண்ணம் உண்டு. அதுவே உயிர் பரம் என்றது. அதைக் கடந்து சென்றால் நாதாந்தம் என்ற துரியாதீதம் அமையும். அதில் நாதம் இல்லை. அதனால் **சொல்லிறந்தோம்** என்றது. சொரூபம் – சிவ சொரூபம்.

திருவருள் பெற்றமையால் உண்டான அநுபவநிலை கூறியவாறு.

**5. குரவன் உயிர்முச் சொரூபமுங் கைக்கொண்**
**டரிய பொருள்முத் திரையாகக் கொண்டு**
**பெரிய பிரானடி நந்தி பேச்சற்**
**றுருகிட என்னையங் குய்யக்கொண் டானே. 1594.**

குரவன் உயிர் முச்சொரூபமுங் கைக்கொண்டு – தீட்சை செய்ய அமைந்த குரு சீடனின் தூல, சூக்கும, காரண உடல்களிலுள்ள காரணமான தடைகளை நீக்கி, அரிய பொருள் முத்திரையாகக் கொண்டு – அரிய உயிரைக் குருவினிடம் பொருந்தும்படி செய்து. பெரிய பிரானடி நந்தி பேச்சற்று உருகிட – யாவருக்கும் தலைவனான சிவத்துடன் மௌன யோகத்தில் விளங்கிடப் பொருந்தி. என்னை அங்கு உய்யக் கொண்டானே – என்னை ஆண்டு கொண்டருளினான்.

அரிய பொருள் முத்திரையாகக் கொண்டு – உயிர் மூன்று வகைக் கோசத்துள் மயங்கியிருந்த அவல நிலையை மாற்றி. திரை – மறைப்பு.

குரு பிரணவ சமாதியில் பொருந்தும்படி அருளினான்.

**6. பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே**
**மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்**
**காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு**
**வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே. 1595.**

பேச்சற்ற இன்பத்துப் பேரானந்தத்திலே – முன்னிலையில் அமைந்த குரு மௌனானந்தமாகிய பேரின்பத்திலே. மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்து – எனது பசுகரணங்களை அழித்து என்னிடம் அகண்ட அறிவாகிய சிவத்தைப் பதிப்பித்து என்னை நான் அறியாமல் செய்து. காச்சற்ற சோதி கடன் மூன்றுங் கைக்கொண்டு – வெப்பமற்ற சந்திரமண்டல ஒளியில் மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றையும் கைக்கொண்டு. வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே – அவற்றால் அடைந்த பெருமைகளை அழித்துக் திருவடிகளைச் சூட்டி என்னிடத்தில் நிலைபெற்றனன்.

பேச்சற்ற இன்பம் – நாதாந்தம். மாய்த்து மாச்சு எனவும், காய்ச்சு காச்சு எனவும், வாய்த்த வாச்ச எனவும் வந்தன.

குரு பசுகரணங்களை அழித்துப் பதிகரணங்கள் ஆக்கி இன்பத்தில் திளைக்கச் செய்தான்.

**7. இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்**
**பதிவித்த பாதப் பராபரன் நந்தி**
**கதிவைத்த வாறும் மெய்காட் டியவாறும்**
**விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. 1596.**

இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும் – எனது ஆத்மாவிலும், பார்வையிலும், எனது சிரத்தின் மீதும். பதிவித்த பாதப்பராபரன் நந்தி – திருவருளைப் பதிவித்த பராபரனாகிய குருவானவர். கதிவைத்தவாறும் – கீழ்முகமாகச் சுருண்டுகிடந்த குண்டலினியை ஊர்த்துவ கதியாக அமைத்தருளியதும். மெய்க்காட்டியவாறும் – விந்து நாதங்களை உணர்த்தியருளியதும். விதிவைத்தவாறும் – எம்முறையில் விந்து நாதங்கள் தொழிற்படுமோ, அம்முறை உணர்த்தியருளியதும். விளம்ப ஒண்ணாதே – பிறருக்கு எடுத்துச் சொல்லமுடியாததாகும்.

இதயம் – எது மத்தியமாக உள்ளதோ அது இதயம். தூல உடலுக்கு இரத்தாசயம் இதயம். சூக்கும காரண உடலைக் கடந்தபோது ஆத்மாவே இதயம். பராபரன் – முன்னிலையில் அமைந்த குரு.

குருநாதன் அருளிய பெருமையைக் கூறமுடியாததாகும்.

**8. திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்**
**பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்**
**குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக்**
**கருவழி வற்றிடக் கண்டுகொண் டேனே. 1597.**

திருவடி வைத்து என் சிரத்து – என்னுடைய சிரசின்மீது திருவடியைச் சூட்டி. அருள் நோக்கி – அருளால் பார்த்து. பெருவடிவைத்தந்த பேர் நந்தி தன்னை – எங்குமாயிருக்கும் பெரிய வடிவினைத் தந்த பெரிய பெருமானை. குருவடிவிற் கண்ட கோனை – குருவடிவில் வந்த தலைவனை. எம் கோவை – எம்முடைய அரசனை. கருவழி வற்றிடக் கண்டுகொண்டேனே – பிறவி உண்டாகும் வழி உலர்ந்துபோகக் கண்டுகொண்டேன்.

திருவடி வைத்தல் – சங்கற்பத்தால் திருவருட் சத்தியைப் பதித்தல். அருள் நோக்கல் – குருவின் சத்தியைச் சீடனிடம் பார்வையால் பதித்தல். பரிசமும் நோக்கமும் ஞானதிட்சையாகும். ஆற்றுதல் – உலர்த்தல், நீக்குதல்.

குருநாதன் அருளிய ஞானதீட்சையைக் கூறியவாறு.

**9. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்**
**திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்**
**திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. 1598.**

திருவடி ஞானஞ் சிவம் ஆக்குவிக்கும் – திருவடி ஞானம் சிவமயமாக ஆக்கும். திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும் – திருவடி ஞானம் சிவலோகத்தில் சேர்க்கும். திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும் – திருவடி ஞானம் சீவனைச் சிறைப்படுத்தியிருந்த மலத்தினின்றும் நீக்கும். திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே – திருவடி ஞானமே அணிமாதி சித்திகளையும், முத்திப் பேற்றினையும் அளிக்கும்.

திருவடி ஞானம் – வியாபக அறிவு.

திருவடி தீட்சையால் உண்டாகும் பயன் கூறியவாறு.

**10. மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை**
**மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிவிடும்**
**பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்**
**தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே. 1599.**

மேல் வைத்தவாறு செய்யாவிடில் – முன்னிலையில் அமைந்த குருநாதன் கீழ் நோக்குதலையுடைய குண்டலினி சத்தியை மேல்நோக்குதலைச் செய்யும்படி உபாயம் அமைக்காவிடில். மேல்வினைமால் வைத்த சிந்தையை மாயமதாக்கிடும் – முற்காலத்தில் செய்த வினைகள் அறியாமையால் மயங்கிய மனத்தை மாயையின் வழிச்செலுத்திவிடும். பால் வைத்த சென்னிப் படரொளி வானவன் – அவ்விதம் அமையாமல் பால்போன்ற வெண்ணிற ஒளியாகப் பிரகாசிக்கும் மதிமண்டலத்தில் விளங்கும் சதாசிவம். தாள் வைத்தவாறு தரிப்பித்தவாறே – தனது திருவடியைப் பதிப்பித்துத் தன்னை அகலாது நிலைபெறவும் செய்தான்.

மேல் வைத்தவாறு செய்தல் – அகண்டத்தைப் பற்றும்படி செய்தல். மனம் அகண்டத்தைப் பற்றி இன்புறும்போது கண்டமாகிய உலகப் பொருளில் செல்லும் அவா விடுபடும். தரிப்பித்தல் – அகண்டத்தில் நிலைபெறச் செய்தல்.

**இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி**
**அருளிய பெருமை யருண் மலையாகவும்** – திருவாசகம்.

குருநாதன் துன்பம் நீக்கி இன்பம் நுகரும்படி செய்தான்.

11. **கழலார் கமலத் திருவடி என்னும்**
**நிழல்சேரப் பெற்றேன் நெடுமால் அறியா**
**அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்**
**குழல்சேரும் என்னுயிர்க் கூடுங் *குலைத்ததே. 1600.**

*பாட பேதம் : குலைத்தே.

கழலார் கமலத் திருவடி என்னும் நிழல் சேரப் பெற்றேன் – ஒலிக்கின்ற கழல் பொருந்திய கமலத்தில் விளங்கும் திருவடி நிழலை அடையப்பெற்றேன். நெடுமால் அறியா – திருமாலும் காணமாட்டாத. அழல் சேரும் அங்கியுள் ஆதிப் பிரானும் – வெம்மை பொருந்திய அக்கினி மண்டலத்தில் உள்ள உருத்திரமூர்த்தியும். குழல் சேரும் என்னுயிர்க் கூடுங் குலைத்தே – என்னுடைய உடல் பற்றை அழித்துச் சுழுமுனை உச்சியில் ஒளி பொருந்திய சிவமாக அமைந்தது.

கழல் – அடைந்தாரைக் காக்கும் வீரக்கழல். நெடுமால் அறியாமையாவது, நெடுமால் உருவமூர்த்தி ஆனமையின் உருவங் கடந்த அகண்டப் பொருளை அறிய முடியாமை. குழல் – சுழுமுனை. உயிர்க்கூடு – உடம்பு.

திருவருள் பெற்றமையால் உடல் பற்றுவிட்டது.

**12. முடிமன்ன *ராகிமூ வுலகம தாள்வர்**
**அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்**
**முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்**
**குடிமன்ன ராய்க்குற்ற மற்றுநின் றாரே. 1601.**

*பாடபேதம் : ராகின்மூ

முடிமன்னராகிய மூவுலகமது ஆள்வர் – முடி சூடிய மன்னராயின் மூன்று உலகங்களையும் ஒருசேர ஆளுவர். அடிமன்னர் இன்பத்து அளவில்லை கேட்கின் – ஆராயின் சிவனடியாராகிய மன்னர்கள் பெறும் இன்பத்துக்கு அளவே இல்லை. முடிமன்னராய நின்ற தேவர்கள் – முடிமன்னராகவுள்ள தேவர்களும். ஈசன் குடிமன்னராய்க் குற்றமற்று நின்றாரே – இறைவனுக்கு வழிவழி ஆட்செய்யும் குடிமன்னராயின் குற்றம் நீங்கி நின்றோர் ஆவர்.

முடிமன்னர் இன்பம் அளவுபட்டது. அடிமன்னர் இன்பம் அளவுபடாதது. தேவரும் குடிசெய்து ஆட்படின் குற்றம் நீங்கி இன்பம் பெறுவர்.

இறைவன் திருவருள் பெற்றவர் நிலையான இன்பம் பெறுவர்.

**13. வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநான்**
**பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்**
**எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு**
**மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே 1602.**

வைத்தேன் அடிகள் மனத்தினுள்ளே நான் – நான் என் மனமண்டலத்துள் இறைவனது திருவடிகளான விந்து நாதங்களைப் பதித்துக்கொண்டேன். பொய்த்தே எரியும் புலன்வழி போகாமல் – அதனால் பொய்யை மெய்போன்று

காட்டி அக்கினியைத் தூண்டி நடத்தும் புலன்வழிச் செல்லாமல் மனத்தை மீட்டு. எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு – இளைத்தவனாகிய நான் படும் இரு வினைத் துயரினை மாற்றி. மெய்த்தேன் அறிந்தேன் அவ்வேதத்தின் அந்தமே – வேதத்தின் முடிவாகிய ஞானானந்தத்தை அடைந்தேன்.

வேதத்தின் அந்தம் – தத்துவமசி. அ∴தாவது, நீ எதை நினைக்கிறாயோ அது ஆகிறாய் என்பது.

திருவருள் பெற்றமையால் இருவினைத் துயரினை மாற்றி உண்மை இன்பம் பெற்றேன்.

**14. அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்**
**முடிசார வைத்தனர் முன்னை முனிவர்**
**படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்**
**குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே 1603.**

அடி சாரலாம் – திருவருளைப் பெறலாம். அண்ணல் பாதம் இரண்டும் – சிவகுருவினது இரண்டு திருவடிகளையும், முடிசாரவைத்தனர் முன்னை முனிவர் – பழமையான முனிவர் முடியில் தரித்துக் கொண்டனர். படிசார்ந்த இன்பப் பழஅடி வெள்ளம் – படிமுறையிலே அடைந்த பேரின்ப வெள்ளத்து. குடிசார்நெறி கூடிநிற்பவர் கொள்கையே – குடியாகக் கொண்ட நெறியிலே கூடிநிற்பவர் கொள்கை இதுவாம்.

பாதம் இரண்டு – விந்து நாதம். மந்திரம் 1853 பார்க்க விளங்கும். குடிசார் நெறி – நிரந்தரமாகப் பெறும் நெறி. **குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்** – திருவாசகம்.

சிவத்தினது திருவருளைப் பெறுபவர் பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருப்பர்.

**15. மந்திர மாவதும் மாமருந் தாவதுந்**
**தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்**
**சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்**
**எந்தை பிரான்தன் இணையடி தானே. 1604.**

மந்திரமாவதும் – நினைப்பவனைக் காக்கும் மந்திரமாவதும். மாமருந்தாவதும் – பிறவி நோய்க்கு மருந்தாவதும். தந்திரமாவதும் – திருவருளைப் பெறக்கூடிய கிரியையாவதும். தானங்களாவதும் – அடைந்தார் பெறும் பயன் எய்தும் புண்ணியத் தலங்களாவனவும். சுந்தரமாவதும் – நன்மையைப் பெறுவதால் வரும் அழகாவதும். தூய்நெறியாவதும் – வீடுபேற்றை அளிக்கும் மேன்மையான நெறியாவதும். எந்தை பிரான்தன் இணையடி தானே – எந்தையாகிய சிவபிரானது இரு திருவடிகளேயாம்.

**மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி** – அப்பர் தேவாரம். எம்பெருமானது திருவடியே இத்துணையும் ஆவன.

பரமானந்த சதாசிவ சற்குரு

## தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அருளிய

## உபதேசம்

எங்கும் நீக்கமற நின்று அருளுகின்ற அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நமது கல்வியாலோ அல்லது வேறு முயற்சிகளாலோ அறியமுடியாது. எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இயற்கைக் கடவுளை ஆசான் திருமூலதேவர் அறிந்தவர் ஆவார். அவர் ஆசியில்லாமல் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவடியை நாம் பற்ற முடியாது. பற்றிக்கொள்ள வேண்டும் என்றால், ஆசான் திருமூலதேவரை தினமும் **ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி** என்று காலை, மாலை தீபம் ஏற்றி, ஒரு வெண்ணிறத் துணியில் அமர்ந்து, தினமும் திருவடியைப் போற்றி பூஜித்து வரவேண்டும். தினமும் தொடர்ந்து பூஜித்துவந்தால், நாம் பலஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கும். பாவங்கள் நீங்கினால் அஞ்ஞானகாசம் நீங்கும். அஞ்ஞானகாசம் நீங்கப்பெற்றால் சிறப்பறிவு வரும். எல்லாம்வல்ல இயற்கைக்கடவுளே, பெறுதற்கரிய மானுட தேகத்தில் இருக்கிறார். அவர் வெளிப்பட்டு அருளவேண்டும் என்றால், குருபகவானாகிய திருமூலதேவருடைய ஆசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**எல்லாம்வல்ல பரம்பொருளை நாம் அறிந்து உய்யவேண்டும் என்றால், குருபக்தியைத் தவிர வேறு வழியில்லை. எனவே, குருபகவான் திருமூலர் திருவடியைப் போற்றுவோம் ஞானசித்திபெற்று, இனி பிறவாநிலையை அடைவோம்.**

## தவதூடணம்

தவதூடணம் – தவநிந்தை. அஃதாவது புறநோக்கை விட்டு அகநோக்குக் கொண்டவர்க்குப் புறத்தே செய்யும் கிரியை ஒன்றும் வேண்டாம் என்று கூறுவது.

**1. ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றாற்**
**காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்**
**சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்**
**போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே 1633**

ஓதலும் வேண்டாம் உயிர்க்குயிர் உள்ளுற்றால் – உயிர்க்குயிராகிய பொருளை உள்ளே பெற்றபின் கற்று அறிய வேண்டியது ஒன்றும் இல்லை. காதலும் வேண்டாம் மெய்க் காயமிடம் கண்டால் – உண்மைப் பொருளான சிவத்தை எடுத்த உடலில் கண்டால் அன்பு செய்தலும் வேண்டாம். சாதலும் வேண்டாம் சமாதி கைகூடில் – தன்னை மறந்த சமாதிநிலை கிட்டியபின் இறத்தலும் வேண்டியதில்லை. போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே – மனத்தைப் புலன்வழியாகப் போகாது தடுத்து நிலைநிறுத்தும் ஆற்றல் பெற்றவர்க்குப் பிற இடங்களுக்குச் சென்று தவம் செய்ய வேண்டியது இல்லை.

கற்றதனாலாய பயன் இறைவனைக் காணுதல். இறைவனைக் கண்டபின் கற்றல் வேண்டாம். இருபொருள் உள்ளபோது காதல். பொருள் ஒன்றானபோது காதல் வேண்டாம். உடலினின்றும் உயிர் பிரிதல் சாதல். சமாதியில் உடலினின்றும் உயிர் தனித்து நிற்றலின் சாதலும் வேண்டாம். புலன்வழி போகாமைக்கு மலை காடு முதலிய பிற இடங்களுக்குச் செல்லுதல். புலன்வழி போகாது மனம் நிலை பெற்றபோது செல்லுதலும் வேண்டாம்.

மனத்தைத் தடுத்துச் சமாதியில் பொருந்தி மெய்ப்பொருளை அடையப்பெறின், தவம் வேண்டாம்.

**2. கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்**
**சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்**
**சுத்தமும் வேண்டாஞ் துடக்கற்று நிற்றலாற்**
**சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. 1634**

கத்தவும் வேண்டாம் கருத்தறிந்து ஆறினால் – உண்மையை உணர்த்தும் நூல்களின் கருத்துக்களை அறிந்து அடங்கினால் ஓதலும் வேண்டாம். சத்தமும் வேண்டாம் சமாதி கைகூடினால் – அங்ஙனம் அறிந்து மெய்ப்பொருளோடு கூடினால் நாதசம்மியமும் தேவையில்லை. சுத்தமும் வேண்டாம் துடக்கற்று நிற்றலால் – இவ்வாறு நின்றவர் மனம் அசுத்தமின்மையின், சுத்தம் செய்யும் காரியமும் வேண்டாம். சித்தமும் வேண்டாம் செயலற்று இருக்கிலே – சித்தம் எண்ணுவதை விட்டபோதே சித்தமும் வேண்டாம்.

துடக்கு – தொடர்பு. புறத்தொடர்பு இன்மையின் அசுத்தமும் இல்லை. சித்தத்தின் செயல் – சிந்தித்தல். சிந்தித்தல் இன்மையின் சித்தமும் இல்லை.

சமாதி கூடியவர்க்குக் கிரியை முதலியவை வேண்டாம்.

**3. விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்**
**விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்**
**விளைவறி வார்பண்டை *மெய்யறஞ் செய்வார்**
**விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே. 1635.**

*பாடபேதம் : மெய்யுறஞ்.

விளைவு அறிவார் பண்டை மெய்த்தவஞ் செய்வார் – தவத்தின் பயனை அறிபவர்களே உண்மைத் தவத்தைச் செய்பவர். விளைவு அறிவார் மெய்யுரை செய்வார் – இவர்களே உண்மையை அறிந்து சீடனுக்கு எடுத்துரைக்கும் உண்மைக் குரவராவர். விளைவு அறிவார் பண்டை மெய்யுறஞ் செய்வார் – இவர்களே பழமையான சூக்கும தேகத்தை உறுதி செய்பவர். விளைவு அறிவார் விண்ணின் மண்ணின் மிக்காரே – ஆதலால் இவர் விண்ணகத்தும் மண்ணகத்தும் மிக்கார் ஆவர்.

மெய்யுறம் செய்தலாவது, ஒளி உடம்பு செய்தல். **அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி** –திருவாசகம். சூக்கும உடலை நிலை நிறுத்தினவர்களின் சங்கற்பம் எல்லாம் நிறைவேறுதலின், 'விண்ணின் மண்ணின் மிக்கார்' என்றது.

தவத்தின் பயனை அறிந்து ஒழுகுபவரே விண்ணவரிலும் மேம்பட்டவராவர்.

**4. கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்**
**தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி**
**வாடித் தவஞ்செய்வ தேதவம் இவைகளைந்**
**தூடிற் பலவுல கோரெத் தவரே. 1636.**

கூடித் தவஞ் செய்து கண்டேன் குரைகழல் – திருவருளோடு பொருந்தி நிற்கின்ற தவத்தைச் செய்து ஒலிக்கின்ற பர நாதவடிவாகிய திருவடியைக் கண்டேன். தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி – நெடுநாள் அந்நிலையிலிருந்து தேடிச் சிவகதியைப் பெற்றேன். வாடித் தவஞ்செய்வதே தவம் – இவ்வாறு இந்திரியங்களைத் தன்வழிப்படுத்தி ஒடுங்கி நிற்றலே தவம். இவை களைந்து ஊடில் பல உலகோர் எத்தவரே – இவ்வாறின்றி மாறுபட்டு இந்திரியவயம் மயங்கிய பல உலகத்தினர் எத்தவமுடையோர் ஆவர்?

இந்திரிய வழி மயங்காது மனத்தைத் தடுத்து இறைவன் திருவடியில் ஒடுங்குதலே தவமாகும்.

**5. மனத்துறை மாகடல் ஏழுங் கைநீந்தித்**
**தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்**
**பவத்திடை *யாளர் அவர்பணி கேட்கின்**
**முகத்திடை நந்தியை முந்தலு மாமே.**

*பாடபேதம் : யாகார்.

மனத்துறை மாகடல் ஏழுங் கைநீந்தி – மனத்திலே சங்கற்பத்தாலாகிய பெரிய கடலாகவுள்ள ஏழினையும் கடந்து. தவத்திடையாளர்தம் சார்வத்து வந்தார் பவத்திடை யாகார் – தவமுடையோர் வழி சார்ந்து அவரோடு இணங்கியிருப்பார்

பிறப்புக்கு வரமாட்டார். அவர் பணி கேட்கின் – பின் அத்தவமுடையோர் ஏவலைக் கேட்டு நடந்தால். முகத்திடை நந்தியை முந்தலும் ஆமே – சிவத்தைத் தம்முகத்தின் முன்னர் கண்டு சிவப்பேறு அடைதலும் கூடும்.

மாகடல் ஏழு – ஆணவத்தின் காரியமாகிய ஏழு குற்றங்கள். அவையாவன : மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பனவாம்.

மணமாசுகளை நீக்கித் தவமுடையோர்பால் சார்ந்து அவர் ஏவல் கேட்டு நடந்தால் சிவத்தைக் காணலாம்.

**6. மனத்திடை நின்ற மதிவாள் உருவி**
**இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்**
**புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்**
**தவத்திடை யாறொளி தன்னொளி யாமே. 1638.**

மனத்திடை நின்ற மதிவாள் உருவி – மனமாகிய உறையுளில் செறிக்கப்பட்ட ஞான வாளை உருவி. இனத்திடை நீக்கி – பிரபஞ்ச வாசனையை விட்டு. இரண்டற ஈர்த்து – சிவத்துடன் அநந்நியமாகப் பொருந்தி. புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால் – ஞானேந்திரியங்கள் ஐந்தும் விஷயங்களைப் பற்றி வெளிச் செல்வதைத் தடுத்தால் தவத்திடையாறு ஒளி தன் ஒளியாமே – தவத்திடை காணும் சிவஒளி தன்னொளியாகும்.

ஒப்புமைப் பகுதி.

**ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்**
**மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்**
**ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்**
**வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை வராமே**

**–திருவாசகம்613.**

1564ம் மந்திரமும் இப்பொருளது.

மதிவாள் – ஞானவாள். இனம் – மாயப்படை. இரண்டற ஈர்த்து மறித்தல். நாதாந்தத்தில் நிற்றல். நாதம் உள்ளவரை பசுஞானம் இருக்கும். தவத்திடையாறு ஒளியாவது, நீற்றுக்கவசம்.

ஞானத்தினால் பந்தத்தை நீக்கிப் புறம்போகாது நிலைத்திருந்தால் சிவஒளி காணலாம்.

**7. ஒத்து மிகவு நின்றானை யுரைப்பது**
**பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ**
**முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதஞ்**
**சத்தான செய்வது தான்தவந் தானே. 1639**

ஒத்து மிகவும் நின்றானை உரைப்பது – சீவர்களது அறிவினில் பொருந்தி நின்றானை உணர்வது. பத்தி கொடுக்கும் – சிவக் காதலை உண்டாக்கும். பணிந்து அடியார் தொழ முத்தி கொடுக்கும் – மேலும் அடியார் பணிந்து நடோறும் தொழுகின்றமையால் முத்தியும் கிட்டும். முனிவன் எனும் பதம் சத்தான செய்வதுதான் தவந்தானே – அவ்வாறு பிரபஞ்ச நோக்கை முனிகின்றவன் என்ற சொல்லை உண்மைப்படுத்துவதே தவமாம்.

உரைப்பது – உராய்வது, அறிவினால் சிந்திப்பது. சத்து – உண்மை.

உயிருக்குயிரான சிவத்தைச் சிந்தித்திருப்பதே உண்மையான தவம்.

**8. இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி**
**மலர்தொட்டுக் கொண்டேன் வரும்புனல் காணேன்**
**தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளந்**
**தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே. 1640.**

இலைதொட்டுப் பூப்பறித்து எந்தைக்கென்றெண்ணி – பத்திரங்களை எடுத்தும், பூவினைக் கொய்தும் எம்மிறைக்கு ஆகும் என்று நினைத்து. மலர் தொட்டுக் கொண்டேன் – மலர்களைத் தொடுத்துக் கொண்டிருந்தேன். வரும் புனல் காணேன் – அப்போது ஆகாய கங்கையாகிய ஒளியைக் காணவில்லை. தலை தொட்ட நூல் கண்டு தாழ்ந்ததென் உள்ளம் – மூலாதாரத்திலிருந்து சிரசு வரை செல்லுகின்ற சுழுமுனை நாடியைக் கண்டு என்மனம் அடங்கியது. தலைதொட்டுக் கண்டேன் தவங் கண்டவாறே – சிரசில்

சந்திரகலை விளங்கும்படி செய்து தவத்தின் பொருளை அறிந்தேன்.

புறக்கிரியையால் சந்திரகலை விளங்காது.

**9. படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்**
**கிடரடை யாவண்ணம் ஈசன் அருளும்**
**இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்**
**உடரடை செய்வ தொருமனத் தாமே. 1641.**

படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்கு – படர்ந்த ஒளிக் கிரணத்தை உடைய தவத்தைச் செய்த அன்பர்க்கு. இடர் அடையா வண்ணம் ஈசன் அருளும் – துன்பம் வாராவண்ணம் இறைவன் காத்தருளுவான். இடர் அடை செய்தவர் மெய்த்தவம் நோக்கில் – துன்பத்தை வாராவண்ணம் செய்தவரது உண்மைத் தவத்தை ஆராயின். உடர் அடை செய்வது ஒரு மனத்தாமே – உடம்பை மீண்டும் பெருமை செய்வது அவரது மன ஒருமைப்பாட்டினால் ஆகும்.

இடர் – துன்பம். உடர் – உடல்.

மன ஒருமைப்பாட்டினால் நிராதாரத்தில் நிற்பவர் மீண்டும் பிறவிக்கு வரமாட்டார்.

**10. ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்**
**ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்**
**நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்**
**சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே. 1642.**

நோற்றுத் தவஞ் செய்யார் நூலறியாதவர் – நூலை அறியாதவராய்ப் பொறுமையோடு தவம் செய்யாதவர். சோற்றுக்கு நின்று சுழல்கின்றவாறு – வயிற்றுக்கு இரை தேடி வருந்தி அலைவது. ஆற்றிற் கிடந்த முதலை கண்டஞ்சிப்போய் – ஆற்றிலேயுள்ள முதலைக்கு அஞ்சி ஓடி. ஈற்றுக் கரடிக்கு எதிர்ப்பட்டதன் ஒக்கும் – அண்மையிலே ஈன்ற கரடிக்கு முன்னே அடைந்து வருந்துதலை ஒக்கும்.

நூல் – நரம்பு, சுழுமுனை.

நூலை அறிந்து தவம் செய்தலுக்கு அஞ்சிப் பிச்சை எடுத்துத் துன்புறுதல், முதலைக்கு அஞ்சிக் கரடிக்கு முன்னே அடைந்து துன்புறுதல் போலாம்.

நூலை அறிந்து தவம் செய்தலே துன்பம் நீங்கும் வழி.

**11. பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்**
**குழக்கன்று துள்ளியக் கோணியைப் *புல்காற்**
**குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்**
**இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே. 1643.**

*பாடபேதம் : பல்காற்

பழுக்கின்றவாறும் பழம் உண்ணுமாறும் – சிவயோகத்தால் சிவக்கனி பழுக்குமாறும், அதை உண்ணுமாறும். குழக்கன்று துள்ளி அக்கோணியைப் பல்கால் – பிராணன் பன்முறை சஞ்சரிக்கின்ற உடம்பிடை. குழக்கன்று கொட்டிலில் கட்டவல்லார்க்கு – பிராணனைச் சுழுமுனையில் நிறுத்தவல்லார்க்கு. உள் இழுக்காது நெஞ்சத்திட ஒன்றுமாமே – சுவாசம் இயங்குத் தன்மை கெட்டு ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் ஒன்றி நின்றுவிடும்.

குழக்கன்று – பிராண வாயு. கோணி – உடம்பு. கொட்டில் – சுழுமுனை. நெஞ்சம் – ஊர்த்துவ சகஸ்ரதளம்.

ஊர்த்துவ சகஸ்ரதளத்தில் மனம் எண்ணுதலை விட்டு அடங்கியபோது சுவாச இயக்கம் நின்றுவிடும்.

**12. சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்**
**சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்**
**சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்**
**சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே. 1644.**

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால் – சித்தம் இடையறாது சிவத்தை நினைந்து சிவமாகவே அவருக்குச் செய்யவேண்டிய தவம் ஒன்றும் வேண்டாம். சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால் – அவ்வாறு சித்தம் சிவமாகிப் பேரானந்தம் பொருந்திய அடியார் உறவும் உண்டானால். சித்தம் சிவமாகவே சித்தி முத்தியாம் –

அவர்களது சித்தம் சிவமாய்ச் சித்தியும் முத்தியும் உண்டாம். சித்தஞ் சிவமாதல் செய் தவப்பேறே – ஆகையால் சித்தமானது சிவமாவதே பூர்வம் செய்த தவத்தின் பயனாம்.

சித்தம் இடையறாது சிவனை எண்ணிச் சிவமாதலே தவம் என்பதாம்.

## உபதேசம்

குரு, சீடனுக்குக் கூறும் வாசகம் உபதேசமாகும். குரு உபதேசத்தால் அருட்கண் விழிப்படையும் என்க.

**1. விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்க்கொண்டு**
**தண்ணின்ற தாளைந் தலைக்காவல் முன்வைத்து**
**உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்**
**கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. 113.**

பதப்பொருள் : விண்ணின்று இழிந்து – இறைவன் பரமாகாயத்தினின்று இறங்கி, வினைக்கு ஈடாய் மெய்கொண்டு – ஆன்மாக்களின் வினைக்கேற்பத் திருமேனி தாங்கி, தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து – குளிர்ச்சி பொருந்திய தனது திருவடியை ஆன்மாக்களுக்குப் பாதுகாவலாக அமைத்து, உள் நின்று உருக்கி – உள்ளேயிருந்து ஊன், உடல் முதலியவற்றை உருகச்செய்து, ஓர் ஒப்பில்லா ஆனந்தக் கண்ணின்று காட்டி – ஒப்பு ஒன்றுமில்லாத ஆனந்தத்தைக் கண்ணில் நின்று காட்டி, களிம்பு அறுத்தான் – பாசத்தை நீக்கியருளினான்.

**விளக்கம்** : வினைக்கீடாய் மெய் கொள்ளுதலாவது, ஆன்மாக்களின் பக்குவா பக்குவத்துக்கேற்பத் திருமேனி கொள்ளுதல். தாளைத் தலைக்காவலாக வைத்தலாவது, திருவடிஞானம் பெறச்செய்தல். உள்நின்று உருக்குதலாவது, மனம் மெய் ஆகியவற்றை உருகும்படி செய்தல். ஆனந்தக் கண்ணாவது, ஆனந்தம் இருக்கும் இடம். களிம்பு – பாசம், ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்றும் பாசமாம்.

**கருத்து** : இறைவன் ஆன்மாக்களின் பக்குவா பக்குவத்துக்கேற்பத் திருவடிஞானம் பதிப்பித்துப் பாசங்களைப் போக்கியருளுவான்.

**2. களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே. 114.**

**பதப்பொருள்** : எங்கள் கண்ணுதல் நந்தி களிம்பறுத்தான் – எங்களது நெற்றிக்கண்ணுடைய சிவபெருமான் ஆணவம் முதலிய பாசத்தை நீக்கியருளினான், அருட்கண் விழிப்பித்துக் களிம்பறுத்தான் – தனது அருட்சக்தியைப் பதியவைத்துப் பாசத்தைப் போக்கியருளினான். களிம்பு அணுகாத கதிரொளி காட்டி – மேலும் பாசஇருள் வந்தடையா வண்ணம் சிவசூரியனை உதிப்பித்து: பதியே பளிங்கில் பவளம் பதித்தான் – நந்தியெம்பெருமான் பளிங்கு போன்ற சீவனில் பவளம் போன்ற செந்நிறமான சோதியைப் பதிப்பித்தருளினான்.

**விளக்கம்** : அருட்கண் விழிப்பித்தலாவது : எல்லாச் சீவர்களும் ஞானம்பெற முதலில் தகுதிபெற வேண்டும். தகுதி பெறவே, சீவவிருப்பமும் இறையருளும் கூட வேண்டும். சீவவிருப்பம் என்பது திடீரென்று வரலாம்: சிறிது சிறிதாகவும் வரலாம். எவ்விதமாயினும் பூர்வ சென்ம வாசனையே மூலகாரணமாகும். புலனறிவு, பொறிகளின் வழியே சென்று உலக நாட்டம் கொள்கிறது. யான், எனது எனும் உலக நாட்டம் உள்ள வரையில் அருட்கண் விழிக்காது. அருட்கண் விழிப்பித்தால் உலக நாட்டம் இராது. இந்த இரு நிலைகளும் சாதகனின் மூளையில் அமையவேண்டும். திருவாசகம் கோயில் திருப்பதிகம் பார்க்க விளங்கும்.

**தூரியனாம் சிவன்தோன்றும் தானும் தோன்றும்**
**தொல்லுலக மெல்லாம்தன் னுள்ளே தோன்றும்**
**நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும்**
**நின்றநிலை யெல்லாம்முன் நிகழ்ந்து தோன்றும்**
**–சிவஞான சித்தியார்(பாடல் – 280)**

**கருத்து** : சாதகர்க்குப் பாசத்தைப் போக்கி நந்தி நவமான செஞ்சுடர் நல்குவான்.

**3. பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போற்பசு பாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசு பாசம்**
**பதியணு கிற்பசு பாசம் நிலாவே. 115.**

**பதப்பொருள் :** பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் – சிவன் என்றும், சீவன் என்றும் தளை என்றும் சொல்லப்பெறும் முப்பொருள்களில், பதியினைப்போல் பசு பாசம் அனாதி – சிவனைப் போன்று சீவனும் தளையும் மிகவும் தொன்மையானவை, பசு பாசம் பதியினைச் சென்றணுகா – சீவத் தன்மையும் தளை அல்லது பந்தமும் சிவனைச் சென்றடையா, பதி அணுகில் பசு பாசம் நிலாவே – சிவன் சீவனிடம் விளங்கினால் பசுத் தன்மையும் பந்தமும் நீங்கிவிடும்.

**விளக்கம் :** சிவன், சொரூப நிலை (அகண்ட பொருள்) : சதாசிவன், தடத்த நிலை, சதாசிவனே பதி என்க. பசு – பசுத்தன்மை, கட்டுப்பட்ட நிலை. பசு பாசம் அணுகா என்பது, பசுத்தன்மையும் பாசத் தன்மையும் சிவனை அணுகா என்றபடி.

**கருத்து :** முப்பொருள்களில் சீவனிடம் சிவன் (அகண்டத்தன்மை) விளங்கித் தோன்றில் பசுத்தன்மையும் பாசமும் நீங்கும்.

**4. வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்**
**கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி**
**தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்**
**தோயம தாய்எழுஞ் சூரிய னாமே. 116.**

**பதப்பொருள் :** வேயின் எழுங்கனல் போலே – மூங்கிலில் இருந்து தானே தோன்றும் தீயைப் போன்று, இம்மெய்யெனும் கோயிலிருந்து குடி கொண்ட கோன் நந்தி– இவ்வுடம்பாகிய கோவிலில் குடியிருக்கின்ற தலைவனாகிய நந்தி, தாயினும் மும்மலம் மாற்றி – தாய், சேயினது அழுக்கை நீக்குவது போன்று, சீவர்களது மும்மலங்களாகிய அழுக்கினைப் போக்கி, தயா என்னும் தோயமதாய் எழும் சூரியனாமே – கருணையாகிய கடலினின்றும் உதிக்கின்ற சூரியனாகும்.

**விளக்கம் :** வேயின் எழுங்கனல் என்பது, மூங்கில் ஒன்றோடொன்று உராய்வதால் உண்டாகும் தீ என்றபடி. தீ எழுந்தபோது மூங்கிற்காடு அழிவது போன்று குரு உபதேசத்தால் உந்திக் கமலத்து உதித்தெழும் சோதி தத்துவக் காட்டை அழித்துவிடும். தோயம் – நீர் – கடல்.

**வேயின் எழுங்கனல்** என்றது உபமானம். **மெய்யெனும் கோயிலிலிருந்து குடிகொண்ட கோன் நந்தி** உபமேயம். உபதேச இரகசியத்தை இதனால் விளக்கினார். இந்த உண்மையை அறிவதில் ஞானம் விளங்கும். மனிதனிடமுள்ள மாபெரும் ஆத்ம சத்தி பலவாறான செயல் காரணமாகப் பல பெயரினைப் பெறுகிறது. ஆத்மா அக்கினிக் கூறாலாயது. அது தனது இடை பிங்கலை என்ற சூக்குமநாடிகளால் தேகத்தை ஆளுகிறது. அவ்விதமான நாடிகள் கண்ணுக்குப் புலப்படும் தூல உடலிலும், கண்ணுக்குப் புலபடாத சூக்கும உடலிலும் உள்ளன. இவைகள் Positive, Nagative போன்ற மின்கதியை உடையவை. சுழிமுனை நாடி Neutron எனப்படுகிறது. எண்ணத்தினால் அமையும் சேர்க்கையில் எண்ணம் சத்தியாகிறது. பொருள்களுடன் தொடர்பினால் தொழிற்படும்போது கிரியா சத்தியாகிறது. இவ்விதமான ஆக்கச் செயலுக்கு மின்சத்திப் பெருக்கைப் பெறக்கண்டநெறியே உபதேசமாயிற்று. பொருள்களுடன் பொருந்தி அறிவதில் ஒரு அக்கினிச் சக்தி அமைகிறது என்பதைக் கிரியை வழி நிற்போர் கையாளுகின்றனர். தம்மிடமுள்ள இரு நிலைகளை ஒருமிக்கச் சேர்ப்பதில் அவ்வித மின்காந்தத்தை அடையலாமென்று அடயோகிகள் பிராண அபான சேர்க்கையில் ஈடுபடுகின்றனர்.

மூன்று நாடிகளையும் சேர்ப்பதில் ஞானயோகம் உள்ளது என்று ஞானிகள் கண்டனர்.

**கருத்து :** நந்தியெம்பெருமான் பக்குவம் பெற்றநிலையில் தானே நின்று ஞானக்கனலை எழுப்பி அஞ்ஞானக்காட்டை எரித்தருளுவான்.

**5. சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே**
**சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்**
**ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே. 117**

**பதப்பொருள் :** சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே– சீவனும் சீவனை மறைத்துள்ள பாசமும் சூரியகாந்தக் கல்லும் அதனைச் சுற்றியுள்ள பஞ்சும் போலாம், சூரியகாந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா –சூரிய காந்தக்கல் அதனைச் சூழ்ந்துள்ள பஞ்சை சுடாது, சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல – சூரிய காந்தக்கல் சூரியன் முன்னே பஞ்சைச் சுட்டு எரிப்பது போல, ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே – சீவனது அறிவு, குருவின் அருளைப் பெற்றபோதே பாசம் நீங்கி விளக்கம் பெறும்.

**விளக்கம் :** சூரிய காந்தக்கல், சீவன் : பஞ்சு, பாசம், ஆரியன், குரு. சூரிய காந்தக்கல் சூரியனது பிரகாசத்தில் பஞ்சைச் சுடுவது போல, சீவன் சிவகுருவின் முன் பாசத்தைச் சுட்டெரிக்கும் தன்மையைப் பெறும் என்க.

**கருத்து :** சிவகுருவின் உபதேசத்தினால்தான் பாசம் நீங்கும். குரு அருள் இல்லாத முயற்சி, வெற்றியைத் தருவதில்லை.

எடுத்துக்காட்டு :

**குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு**
**அருவமாய் நிற்கும் சிவம். –ஔவைக்குறள்**

**6. மலங்களைந் தாமென மாற்றி அருளித்**
**தலங்களைந் தானற் சதாசிவ மான**
**புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி**
**நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே. 118.**

**பதப்பொருள் :** நல்சதாசிவமான தலங்கள் ஐந்தால் – ஐம்மண்டலங்களை இயக்கும் நல்ல சதாசிவன் முதலான ஐவரால், மலங்கள் ஐந்தாமென மாற்றியருளி – சிவனுக்கு அமைந்த ஐம்மலப் பாசமானவற்றைக் கெடுமாறு செய்து, அப்பொதுவினுள் நந்தி புலம் களைந்தான் – சிதாகாயப் பெருவெளியில் நடிக்கும் நந்தியெம்பெருமான் மனம் புறத்தே சென்று பற்றும் விஷயங்களை அறுத்தருளினான். உள்நயந்தான் அறிந்து நலன்கள் ஐந்தால் – உயிர்க்குயிராய் விரும்பி எழுந்தருளியிருக்கும் பெருமான் ஆக்கல், காத்தல், துரிசு (குற்றம்) நீக்குவித்தல், மறைப்பை நீக்குதல், அருள்

செய்தல் ஆகிய ஐந்து தொழில்களால் விளக்கம் செய்து ஐந்து மலங்களையும் நீக்கி அருளினார்.

**விளக்கம்** : மலங்கள் ஐந்து – ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. தலங்கள் ஐந்து – சிவசாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கருத்துரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் ஆகிய ஐந்து நிலைகள். நல் சதாசிவம் – நன்மையைச் செய்யும் சதாசிவம். உலகமுகமாகச் செலுத்திய சதாசிவன் சீவர் பக்குவப்பட்ட நிலையில் சிவமுகமாகச் செலுத்திய பாச நீக்கத்துக்குத் துணை செய்யும் என்க.

**கருத்து** : நந்தியெம்பெருமான் சதாசிவன் முதலான மூர்த்தி பேதங்களாய் எழுந்தருளி ஐந்து நிலைகளிலும் விஷய சுகத்தை மாற்றியருளினான்.

**7. அறிவைம் புலனுட னேநான்ற தாகி**
**நெறியறி யாதுற்ற நீராழம் போல**
**அறிவறி வுள்ளே அழிந்தது போல**
**குறியறி விப்பான் குருபர னாமே. 119.**

**பதப்பொருள்** : அறிவு ஐம்புலனுடனே நான்றதாகி – சீவ அறிவு ஐம்புலன்களுடன் கூடியதால் நெறி அறியாதுற்ற நீராழம்போல் – வழி அறியாது வெள்ளத்தில் அகப்பட்டது போல் மயங்கி நிற்கும், அறிவு அறிவுள்ளே அழிந்ததுபோல – ஆனால் சிற்றறிவு பேரறிவிற் சென்று அடங்கியது போல குறி அறிவிப்பான் குருபரனாமே – குருபரனாகியவன் தெளிவினை நல்கி வழியைக் காட்டி அழைத்துச் செல்வான்.

**விளக்கம்** : ஐம்புலன்கள் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், ஐம்புலச்சேர்க்கை அழிவினுக்கு அழைத்துச் செல்லும். குரு உபதேசம் நல்வழியைக் காட்டும் என்க.

**கருத்து** : குரு உபதேசத்தால் சிவஞானம் மிகுந்து இலட்சியத்தை அடைதல் கூடும்.

**8. ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்**
**தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்**
**தீமேவு பலகர ணங்களுள் உற்றன**
**தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே. 120.**

**பதப்பொருள்** : ஆமேவு பால் நீர் பிரிக்கின்ற அன்னம்போல் – பசுவின் பாலினிடமிருந்து நீரைப் பிரிக்கின்ற அன்னப் பறவை போல, தனிமன்றில் தன்னந்தனி நிர்தம் தாமே – சிதாகாயப் பெருவெளியில் ஆடுகின்ற அம்பலவனது ஒப்பற்ற ஆட்டமே சீவர்களிடமிருந்து வினையைப் பிரித்துவிடும், தீமேவு பல கரணங்களுள் உற்றனதாம் – அதனால் தீவினை காரணமாகக் கருவி கரணங்களில் பொருந்திய பாவங்கள் எல்லாம், ஏழ் பிறப்பு எரிசார்ந்த வித்தாம் – ஏழு பிறவியிலும் வறுத்த வித்து முளையாவாறு போல் பயன்தாராவாம்.

**விளக்கம்** : ஆ – பசு. நித்தம், நிருத்தம் – நடனம். அன்னம் பாலினின்றும் நீரைப் பிரிப்பது போலச் சிவநடனம் சீவனிடமிருந்து வினையைப் பிரிக்கும். எரி – நெருப்பு. நெருப்பைச் சார்ந்த வித்து முளையாதவாறு போல், புத்தி தத்துவத்தில் பொருந்திய பாவ புண்ணியம் பயன் தாரா என்க.

**கருத்து** : அம்பலவன் ஆட்டத்தால் வினையும். அதன் பயனாகிய பாவ புண்ணியமும் கெடும்.

**9. வித்தைக் கொடுத்து வியாக்கிரத் தேமிகச்**
**சுத்தத் துரியம் பிறந்து துடக்கற**
**ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு**
**செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே. 121.**

**பதப்பொருள்** : வித்தைக் கெடுத்து வியாக்கிரத்தே மிக –முற்கூறியவாறு பிறவிக்குக் காரணமான கன்மத்தை அழித்துமேல் நிலை எய்த, சுத்தத் துரியம் பிறந்து துடக்கற – விழிப்பு நிலையிலேயே தூய்மையான துரிய நிலை எய்திப் பந்தங்கள் நீங்க, புலன் உயிர் ஒத்து ஒன்றாய் – புலன், உயிர் வழிநின்று ஏகமாய், உடம்பொடு செத்திட்டிருப்பர் சிவயோகியார்கள் – சிவயோகியார்கள் உடலின் அறிவும் செயலுமின்றி இருப்பார்கள்.

**விளக்கம்** : வியாக்கிரம் – மேலான இடம், சுத்த சாக்கிரம். சுத்த சாக்கிரமாவது, விழித்திருந்தும் ஒன்றையும் பற்றாதிருத்தல். சுத்த துரியம் – நின்மல துரியம். நின்மல துரியமாவது, ஒளியில் திளைத்திருத்தல். புலன் உயிர்

ஒத்தலாவது, சுவை முதலிய புலன்கள் வழிச்செல்லாது இருத்தல். செத்திட்டிருத்தலாவது, தமக்கெனச் செயலின்றியிருத்தல்.

**கருத்து** : சிவயோகியர் உடம்போடு கூடியிருந்தாலும் உலக வாதனை அற்றிருப்பர்.

**10. சிவயோக மாவது சித்தசித் தென்று**
**தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்**
**அவயோகஞ் சாரா தவன்பதி போக**
**நவயோக நந்தி நமக்களித் தானே. 122.**

**பதப்பொருள்** : சிவயோகமாவது சித்து அசித்து என்று–சிவயோகம் என்பது, சித்துப் பொருள்கள் இவை சடப்பொருள்கள் இவை என்று விவேகத்தினால் அறிந்து தவயோகத்துள் புக்குத் தன்னொளி தானாய் – சிரசால் சென்றடையும் சிவராஜயோகத்தை அறிந்து அங்குக் காணும் சிவவொளியுள் புகுந்து நின்று, அவயோகம் சாராது அவன்பதி போக – வேறு வகையான தீமை தரும் யோகத்தை மேற்கொள்ளாது அவனுடைய பதியாகிய பரமாகாய மண்டலத்தில் நின்று உய்யும்படியாக, நவயோக நந்தி நமக்கு அளித்தானே – சிறப்பு நெறியை நந்தியெம்பெருமான் நமக்கு அளித்தருளினன்.

**விளக்கம்** : சித்து – அறிவுப் பொருள், சிவன். அசித்து – அறிவில்லாப் பொருள், பிரபஞ்சம். தவயோகமாவது, உடம்பை வருத்தாது உணர்வைச் சுழுமுனை மார்க்கமாகச் சிரசுக்குக் கொண்டுசெல்லுதல்.

**கருத்து** : நந்தியெம்பெருமான் சிவராஜயோகத்தின் மூலம் சிவலோகத்துக்கு அடையும் நெறியை அளித்தனன்.

**11. அளித்தான் உலகெங்குந் தானான உண்மை**
**அளித்தான் அமரர் அறியா உலகம்**
**அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்**
**அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே. 123.**

**பதப்பொருள்** : உலகெங்கும் தானான உண்மை அளித்தான் – உலகமெங்கும் சிவமாகவே இருக்கின்ற

உண்மையை – உணர்த்தியருளினன், அமரர் அறியா உலகம் அளித்தான் – தேவர்களும் அறியமுடியாத இன்ப உலகை எமக்கு வழங்கியருளினான், திருமன்றுள் ஆடும் திருத்தாள் அளித்தான் – பரமாகாய வெளியில் திருநடனம் புரிகின்ற திருவடியை எமக்குச் சூட்டியருளினான், பேரின்பத்து அருள் வெளிதானே அளித்தான் – பேரின்ப நிலையமாகிய அருள்வெளியையும் வழங்கியருளினான்.

**விளக்கம்** : உலகெங்கும் தானான உண்மையாவது, எங்கும் சிவமாகக் காணும் உண்மை. அமரர் அறியா உலகமாவது, மூலாதாரத்தில் கீழ்துருவத்தில் தொழிற்படுகின்ற தேவரது ஆட்சியில்லா உலகம். திருமன்றுள் ஆடுந்திருத்தாள் என்பது, சிதாகாயப் பெருவெளியில் பொன்னொளியில் விளங்கும் திருவடி. பேரின்பத்தருள் வெளியாவது, சிவமும் சத்தியும் பிரிப்பற்ற நிலை.

**கருத்து** : திருமன்றிலாடும் பெருமான் ஞானத்தைக் கொடுத்தருளினான்.

**12. வெளியில் வெளிபோய் விரவிய வாறும்**
**அளியில் அளிபோய் அடங்கிய வாறும்**
**ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறுந்**
**தெளியும் அவரே சிவசித்தர் தாமே. 124.**

**பதப்பொருள்** : வெளியில் வெளிபோய் விரவியவாறும் – சிவன் விளங்கும் சிதாகாயப் பெருவெளியில் ஆகாயமயமான ஆன்மா கலக்கின்ற விதமும், அளியில் அளிபோய் அடங்கியவாறும் – சிவனது இச்சையில் ஆன்மாவினது இச்சை அடங்கிய விதமும், ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும் – சிவ ஒளியில் ஆன்மவொளி ஒடுங்கிய விதமும், தெளியும் அவரே சிவசித்தர்தாம் – அறிவில் தெளிந்து கண்டவரே சிவசித்தராவார்.

**விளக்கம்** : அளியில் அளிபோய் அடங்குதலாவது, ஆன்மாவினது இச்சை ஞானம் கிரியை ஆகியவை சிவனது இச்சை ஞானம் கிரியையில் அடங்கியிருத்தல்.

**கருத்து** : சிவசித்தர்கள் சிதாகாயப் பெருவெளியில் ஒளிமயமாய் ஒடுங்குவதை அறிவினில் உணர்வர்.

13. **சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்**
**சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முள்கொண்டோர்**
**நித்தம் நிமலர் நிராமயர் நீள்பர**
**முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே. 125.**

**பதப்பொருள்** : சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர் – சித்தர்கள் சிவலோகத்தில் பெறும் பேரின்பத்தை இங்கேயே சமாதி நிலையில் பெறுவார்கள், சத்தமும் சத்த முடிவும் தம்முள் கொண்டோர் – நாதத்தையும் நாதமுடிவாகிய நாதாந்தத்தையும் தம்முள்ளேயே தரிசிப்பார்கள், நித்தர் நிமலர் நிராமயர் – அவர்கள் அழிவற்றவராய்க் குற்றமற்றவராய்த் தூய்மையான இன்பத்தில் உறைபவராவர், நீள்பர முத்தர் தம் முத்தி முதல் முப்பத்தாறு – அவ்வாறான மேல் நிலையிலுள்ள சித்தர்களுக்கு முத்திக்கு வழியாகவுள்ளது முப்பத்தாறு தத்துவங்களாகும்.

**விளக்கம்** : முத்திமுதல் – முத்திக்கு முதல். முப்பத்தாறு – முப்பத்தாறு தத்துவங்கள் அல்லது உள்நிலைக் கருவிகள். அவையாவன, ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவ தத்துவம் 5 என்பன. இவையே முத்தியடைவதற்குரிய முதல் நிலையாம்.

**கருத்து** : சித்தர்கள் இல்வாழ்வைக்கொண்டு இங்கேயே முத்தி பெற்றவராவர்.

14. **முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்**
**ஒப்பிலா ஆனந்தக் துள்ளொளி புக்குச்**
**செப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்**
**தப்பரி சாக அமர்ந்திருந் தாரே. 126.**

**பதப்பொருள்** : முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய் – ஆகமங்கள் கூறும் முப்பத்தாறு தத்துவங்களையே முத்தியை அடைவதற்குரிய ஏணியாகக்கொண்டு, ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்கு – நிகரில்லாத சிவானந்தத்தைத் தரும் ஒளியில் புகுந்து, செப்ப அரிய சிவம் கண்டுதான் தெளிந்து – வாக்கினால் கூறுவதற்கு முடியாத பெருமையுடைய சிவத்தைத்

தரிசித்துத் தன்னுண்மையை உணர்ந்து, அப்பரிசாக அமர்ந்திருந்தார் – சித்தர்கள் சிவமாகவே விளங்கியிருந்தனர்.

**விளக்கம் :** தத்துவங்கள் முத்திக்கு ஏணியாதலாவது, தத்துவங்களோடு கூடியிருந்தே முத்தியை நோக்கி மேற்செல்லல்.

**கருத்து :** சித்தர்கள் தத்துவங்களை ஏணிப்படியாகக்கொண்டு ஒப்பற்ற சிவானந்த ஒளியில் புகுந்து இன்புற்றனர்.

**15. இருந்தார் சிவமாகி எங்குந் தாமாகி**
**இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி**
**இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்**
**கிருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே. 127.**

**பதப்பொருள் :** சிவமாகி எங்கும் தாமாகி இருந்தார் – சிவசித்தர்கள் சிவமாந்தன்மை எய்தி எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பர், சிவன்செயல் யாவையும் நோக்கி இருந்தார் – எல்லாம் சிவன் செயல் என்று யாவற்றையும் தரிசித்துக்கொண்டு இருப்பர், முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு இருந்தார் – மூன்று காலங்களின் தன்மைகளை உணர்ந்து இருப்பர், இழவு வந்தெய்திய சோம்பே இருந்தார் – அவர்கள் தங்களுக்கென ஒரு செயலின்றி இருப்பர்.

**விளக்கம் :** எங்கும் தாமாகியிருத்தலாவது, எல்லாவற்றையும் சிவசொரூபமாய்க் காண்டல்.

**அகண்டமும் சுகவடி வாம்சிவ மயம் எனச்**
**சுகந்தனை காண்பது தான்சிவ ரூபம்.**

இந்நிலையைச் சிவசொரூபம் – சிவானந்த போத சாரம் என்பர். சிவன் செயல் யாவையும் நோக்கியிருத்தல் என்பது, சீவர்களுக்கு அமைத்துள்ள பஞ்சக் கிருத்திய நியதியை அறிந்திருத்தல் என்றபடி.

**எங்குங் கலந்த இறைவன்ஐந் தொழிலையும்**
**அங்கங்கு அறிவது அருஞ்சிவ தரிசனம்.** –சி.போ.சாரம்.

இந்நிலையைச் சிவதரிசனம் என்பர். முக்காலத்து இயல்பை அறிதல் என்பது, சிவதரிசனம் பெற்ற சித்தர் அழியாத

நிலையை எய்தினமையின் அழியுந்தன்மைத்தான கால இயல்பை அறிவர் என்றபடி. இழவு வந்தெய்திய சோம்பு என்பது, எல்லாம் சிவன் செயல் என்று நடந்ததைப்பற்றியும் நடக்கவேண்டியதைப் பற்றியும் கவலை கொள்ளாது இருக்கும் நிலை என்றபடி. இழவு–தற்போதங்கெடல். சோம்பு–செயலற்றிருத்தல்.

**கருத்து** : சித்தர் தற்போதம் கெட்டு ஆன்ம சுத்தி பெற்றிருப்பர்.

**16. சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே**
**சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே**
**சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்**
**சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே. 128.**

**பதப்பொருள்** : சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே – ஆன்மசுத்தி பெற்ற சித்தர்கள் பராகாயத்திலே பொருந்தியிருப்பர், சோம்பர் கிடப்பதும் சுத்தவெளியிலே– அவர்கள் அவ்வெளியிலே தம் செயலற்றுக் கிடப்பர். சோம்பர் உணர்வு சுருதி முடிந்த இடம் – அவர்களது உணர்வு வியாபித்திருக்கும் இடம் நாதமுடிவான நாதாந்த நிலையாகும். சோம்பர் கண்டார் அச்சுருதிக்கண் தூக்கமே – அச்சித்தர்கள் நாதத்தைக் கவனித்துக்கொண்டு யோக நித்திரை செய்வர்.

**விளக்கம்** : முப்பத்தாறு தத்துவங்களிலும் நாதம் முப்பத்தாறாவது தத்துவம். அத்தத்துவத்தையும் கடந்த நிலையே நாதமுடிவாகும். அதுவே நாதாந்த நிலையாம். தூக்கம் – சும்மா இருக்கும் நிலை.

**கருத்து** : சித்தர்கள் நாதாந்த நிலையில் பேரின்பம் எய்தியிருப்போர் ஆவர்.

**17. தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே**
**தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே. 129.**

**பதப்பொருள்** : தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முள்ளே – நாதாந்தம் எய்திய சித்தர்கள்

சிவலோகத்தைத் தம்முள்ளே யோக நித்திரையில் கண்டவராவர், தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்முள்ளே – அவ்வாறு நித்திரையில் உள்ளவரே தம்முள்ளே சிவனோடு பொருந்தியிருப்பவராவர், தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்முள்ளே – அவரே சிவபோகமாகிய பேரின்பத்தைத் தம்முள்ளே அனுபவிப்பவராவர், தூங்கிக் கண்டார் நிலை சொல்வது எவ்வாறே –அவர்களது நிலையை அனுபவமில்லாதவர் சொல்வது எங்ஙனம்?

**கருத்து** : சித்தர்கள் தம்முள்ளே சிவனைக் கண்டு பேறுபெற்றனர்.

**18. எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை**
**அவ்வா றருட்செய்வன் ஆதியரன் தானும்**
**ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்**
**செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே. 130.**

**பதப்பொருள்** : எவ்வாறு காண்பான் அறிவுதனக்கு எல்லை –அறிவுக்கு எல்லையாகவுள்ள சிவனை எம்முறையில் அணுகுகிறார்களோ, அவ்வாறு அருள் செய்வான் – அம்முறையில் அவனும் இறங்கி வந்து அணுகுவார்க்கு அருள்புரிவான், ஆதியரன் தானும் ஒவ்வாதமன்றுள் உமை காண ஆடிடும் –அப்பழமையான சிவபெருமானும் உவமையில்லாத சபையில் உமையம்மையாகிய சக்தி காண ஆடுகின்றவன், செவ்வானில் செய்யச் செழுஞ்சுடர் மாணிக்கம் – அவன் செவ்வானத்தைக் காட்டிலும் மிக்க செம்மையான ஒளியை வீசுகின்ற மாணிக்கமாவான்.

**விளக்கம்** : ஒவ்வாத மன்று என்பது, சந்திரமண்டலம், உடம்பில் சூக்குமமாக அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்று மூன்று மண்டலங்கள் உள்ளன. யோகியானவன் அக்கினியைச் சூரியனிலும், சூரியனைச் சந்திரனிலும் அடக்கிக் காணும் திறனுடையவன். செழுஞ்சுடர் மாணிக்கம் உமை காண ஆடலாவது, சத்தியாகிய ஆன்மாவில் செவ்வொளி படரச்செய்தல்.

**கருத்து** : சிவபெருமான் ஆன்மாக்களின் பக்குவத்துக்கேற்ப அருள்புரிவான்.

**19. மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்**
**மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்**
**ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்**
**பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே. 131.**

**பதப்பொருள் :** மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய் – மாணிக்கம் போன்ற செவ்வொளியினூடே மரகதம் போன்ற பச்சை ஒளியாய், மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய் – அச்செவ்வொளியுள் விளங்கும் பச்சை நிறமே மண்டபமாய், ஆணிப்பொன் மன்றில் ஆடும் திருக்கூத்தை – மாற்றுக் குறையாத பசும்பொன் பொருந்திய பரமாகாயத்தில் ஆடுகின்ற நடனத்தை, பேணித் தொழுதென்ன பேறுபெற்றார் – போற்றி வணங்கி எத்தகைய பெருமையினைச் சிவயோகியர் அடைந்தனர்!

**விளக்கம் :** மாணிக்கத்துள்ளே மரகதச்சோதி என்பது, சிரசின் மேல் விளங்கும் செவ்வொளியினூடே கொடி போன்று பின்னிக்கிடக்கும் பச்சை ஒளி. சிவனுக்குச் செம்மையும், சத்திக்கும் பச்சையும் கூறுவதை ஒப்பு நோக்குக. மாடமாவது, இவ்வொளியெ நிருத்த மண்டபம். திருவாசகம் கண்ட பத்திலும் இவ்விதமே கூறப்பட்டுள்ளது.

**பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்**
**பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையினைக்**
**கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை**
**வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லைக் கண்டேனே.**
**–கண்டபத்து (பாடல் 10)**

**கருத்து :** சிவயோகியர் சிரசின் மேல் கூத்தைக் கண்டு பெருமை பெறுவர்.

**20. பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி**
**பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்**
**பெற்றார்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு**
**பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே. 132.**

**பதப்பொருள் :** உலகில் பிரியாப் பெருநெறி பெற்றார் – பொன்னொளியில் திகழ்கின்ற சிவயோகியர் உலகை விட்டுப்

பிரிந்து செல்லாது உலகில் நின்று உலகவர்க்கு உதவுவதையே கொள்கையாகப் பெற்றனர். உலகில் பிறவாப் பெரும்பயன் பெற்றார் – உலகிலிருந்து உலக சேவை செய்வாராயினும் பந்தமின்றிச் செய்வதால் பிறவிக்கு வாராத பெரும் பயன் வாய்ப்பினை உடையவராவர், உலகுடன் பேசாப் பெருமையே பெற்றார் – இவர்கள் அருவத்தில் இருக்கின்றமையின் உலகவரோடு பேசித் திருத்தாது அவரது மனமண்டலத்தில் பொருந்தி அறிவுறுத்துபவராவார்.

**கருத்து** : திருக்கூத்தைக் கண்டு பேறு பெற்றோர் மவுன நிலை எய்தியிருப்பர்.

**21. பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்**
**அருமை எளிமை அறிந்தறி வாரார்**
**ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி**
**இருமையும் கேட்டிருந் தார்புரை அற்றே. 133**

**பதப்பொருள்** : எம் பிரான் போல் பெருமை சிறுமை அறிந்து – எம் சிவபிரானைப் போன்று அண்டத்திலும் அணுவிலும் நிறைந்து, அருமை எளிமை அறிந்தறிவார் ஆர் – அவற்றின் அருமையையும் எளிமையையும் ஒருசேர உணர்ந்து அறிபவர் ஆர்? ஒருமையுள் ஆமை போல் ஐந்து உள்ளடக்கி – அச்சாதகர் மன ஒருமைப்பாட்டுடன் ஆமையைப் போல ஐம்பொறிகளையும் புறத்தே செல்லாது உள்ளுக்கு இழுத்துக்கொண்டு, இருமையும் கேட்டிருந்தார் புரையற்றே – பெருமை சிறுமையாகிய இரண்டையும் குற்றமின்றிச் சாதகர்கள் உணர்ந்திருந்தனர்.

**விளக்கம்** : ஆமை போல் உள் ஐந்து அடக்கலாவது, தீமை வந்தபோது ஆமை உறுப்புகளை உள்ளுக்கு இழுத்துக் கொள்ளுதல் போலத் தீய காட்சியைக் கண்டபோது மனத்தை இழுத்துக் கொள்ளுதல்.

**கருத்து** : மன ஒருமைப்பாடுடைய சாதகர் குற்றமின்றி இருமையும் உணர்ந்திருப்பார்.

**22. புரைஅற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்**
**திரைஅற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்**
**உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தாற்**

**கரையற்ற சோதி கலந்தசத் தாமே. 134.**

**பதப்பொருள்** : புரையற்ற பாலினுள் நெய்கலந்தாற் போல் காய்ச்சிப் புரைகுத்தாத பாலினுள் நெய் எங்கும் நிறைந்திருத்தல்போல, திரையற்ற சிந்தை நல் ஆரியன்–எண்ண அலைகள் இல்லா மனத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் நல்ல ஆசிரியன், செப்பும் உரை அற்று உணர்வோர் – கூறும் உபதேச மொழியை ஆன்ம அறிவு கெட்டு உணர்வோர், உடம்பு இங்கு ஒழிந்தால் – தூல உடம்பை இவ்வுலகில் விட்டால், கரையற்ற சோதி கலந்த சத்தாமே – எல்லைக்குட்படாத அகண்ட சோதியுடன் பொருந்தி அவர்கள் சத்தாவார் (சிவமாவர்).

**விளக்கம்** : பாலினுள் நீக்கமற நெய் கலந்திருத்தல் போல, ஆசிரியன் சீடனது மனத்துள் நீக்கமற நிறைந்திருப்பான் என்பது உவமைப் பொருள். அற்று உணர்தலாவது, மௌனத்தில் உணர்தல்.

**கருத்து** : நல்லாசான் உபதேசத்தைப் பெறுபவர் நித்திய புருஷராவார்.

**23. சத்தமுதல் ஐந்துங் தன்வழித் தான்சாரில்**
**சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ**
**சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்**
**அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே. 135.**

**பதப்பொருள்** : சத்தமுதல் ஐந்தும் தன்வழித் தான் சாரில் – அறிவற்ற தத்துவங்களான சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தமாகிய தன்மாத்திரைகள் ஐந்தும் தோன்றிய முறையே அறிவற்ற அகங்காரத்தில் ஒடுங்க, சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ –அறிவுமயமான ஆன்மாவுக்கு அறிவுமயமான சிவனைத் தவிர ஒடுங்குவதற்குரிய இடம் வேறு உள்ளதோ? சுத்த வெளியில் சுடரில் சுடர் சேரும் – பரமாகாய வெளியில் விளங்கும் சிவவொளியோடு ஆன்மவொளி பொருந்தும், அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே – ஆதலால், என்னைப் பொருளாகக் கொண்டு இத்தன்மை கருதி அருள்நீரால் ஆட்கொள்வாயாக.

**விளக்கம்** : ஆண்டுகொள் அப்பிலே என்பது, அருள் நீரால் ஆட்டித் தூய்மை செய்வாயாக என்றபடி.

**ஆண்டுகொள் அப்பிலே** என்பது சம்பிரதாய இரகசியமாகும். மணிபூரகம் என்ற கொப்பூழ் நிலையமே மனிதனின் பிறவிக்குக் காரணமாயும், சகல ஆசைகளின் இருப்பிடமாயும் உள்ளது. அதுவே, காமாதி காரியங்களுக்கும் இருப்பிடமானது. இந்த ஆதாரமே விஷ்ணு மனிதர்க்குக் கவர்ச்சி செய்கின்ற இடமுமாகும். இங்கேதான் மண்ணீரலின் வழியாகச் சூரியனின் பிராண சக்தி பாய்ந்து தேகத்தைப் பாதுகாக்கின்றது. இங்குள்ள உணர்வு குரு சகாயத்தால் மாற்றப்பட்டால் சிரசை அடைந்து ஒளியாக மாறும். அதனால் இந்தச் சக்கரத்தின் விஷத்தன்மை விருத்தியடையாமல் கண்டத்திலேயெ உணர்வாக நின்றுவிடும். இதைத்தான் கடலில் எழுந்த ஆலகால விஷத்தை நீலகண்டப் பெருமான் உண்டதாகப் புராணம் கூறும். காமத்தின் செயலழிவது சூக்கும நாதத்தினால்தான். குரு சொரூபம் விளங்கும்போது இச்சக்கரத்தின் ஆற்றல் கெடுவதைப் பக்குவமடைந்தோர் காண்பர். இதை அறிவதே ஆன்ம லாபமாகும்.

**கருத்து** : ஆன்மா தூய்மையுற்றுச் சிவனோடு கலக்கும்.

**24. அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்**
**உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு**
**அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்**
**செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே. 136.**

**பதப்பொருள்** : அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால் – கடல் நீரிலுள்ள உப்புத் தன்மையானது சூரிய வெப்பத்தால், உப்பெனப் பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு – உப்பென்று பெயர் பெற்று உப்புக் கல்லாக மாறிய அவ்வுருவம், அப்பினில் கூடி அது ஒன்றாகுமாறு போல் மீண்டும் நீரில் சேர்ந்து அவ்வுருவம் கரைந்து நீராக மாறுவதுபோல் செப்பினில் சீவன் சிவத்துள் அடங்கும் – சொல்லுமிடத்து சீவன் சிவத்துள் அடங்கியிருக்கும்.

**விளக்கம்** : உப்பின் உருவம் கெட்டு நீரில் அடங்குவது போல், சீவனின் தூலசூக்கும் உருவங்கள் கெட்டுச் சிவனில் அடங்கும் என்று உவமையால் உணர்க.

இம்மந்திரமும் ஒரு பரிபாஷையாகும். உந்திக்கமலம் ஆன்மாவுக்கு இருப்பிடமாகும். கடல் நீர், உப்பு என்றும் நீர் என்றும் இரண்டும் பொருந்தி ஓருருவாகக் காட்சியளிக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள கடல்நீர், சூரிய வெப்பத்தால் ஆவியாகி, உப்பு பிரிக்கப்பட்டு காணாத உப்புத்தன்மை காணும் உப்புப்பொருளாக வடிவெடுக்கின்றது. அதுபோல், ஆன்மாவில் வெப்பத்தைத் தரும் சூரியனது குணகஞ்சுக ஆற்றல் தேகசத்தியாக உருவெடுக்கிறது. உந்திக்கமல சூரியனைச் சிரசில் எழுப்பும் திறம் பெற்றபோது குணகஞ்சுகத்தின் செயல் ஒடுக்கப்பட்டு ஒளி விளங்கும் விஞ்ஞான மயதேகத்தை மனிதர் அறிகின்றனர். அதனால் ஆன்மா வாழும் பந்தத்துக்குரிய கோசங்கள் வேறுபடுத்தும் உபாயம் இங்கு உள்ளது. உலக ஆசை இறைவன் ஆசையாக மாறுவதில் மனிதனின் சீவ சுபாவம் மாறிவிடுகிறது. மேகநீரில் கடல் உப்பு ஏறாதது போல், அகண்ட சிவ வியாபகத்தில் சீவகுணங்கள் அடக்கப்பட்டுவிடுகின்றன.

**கருத்து** : நீரில் உப்பு கலந்திருப்பது போல் சீவனில் சிவன் கலந்திருக்கும்.

**25. அடங்குபே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்**
**கிடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ**
**கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்**
**திடம்பெற நின்றான் திருவடி தானே. 137.**

**பதப்பொருள்** : அடங்கு பேரண்டத்து – எல்லாவற்றையும் கொள்ளுகின்ற இறைவனது எல்லையற்ற பரப்பினுள், அணு அண்டம் சென்று அங்கு இடங்கொண்டது – சீவனது எல்லையான அண்டகோசம் சென்று பொருந்தியுள்ளது, இதுவன்றி வேறுண்டோ இல்லை – இவ்வாறு பேரண்டத்தில் சீவனது அண்டகோசம் அடங்குவதேயன்றிப் பிறிதோர் இடம் உண்டோ? இல்லை, கடந்தொறும் நின்ற உயிர் கரை காணில் – உடம்புகள் தோறும் நின்ற உயிர்கள் தாம் சேரும் இடத்தை ஆராயின், திடம்பெற நின்றான் திருவடிதானே –

எல்லாவற்றுக்கும் ஆதாரமாகவுள்ள இறைவனது திருவடியேயாகும்.

**விளக்கம்** : அடங்குதலாவது, சிவனது வியாபகத்துள் சீவன் வியாப்பியமாய் அடங்கியிருத்தல். கடம் – உடம்பு. கரை – முத்திக்கரை.

**கருத்து** : பக்குவப்பட்ட உயிர்களுக்குச் சிவனது திருவடியைத் தவிர அடங்குவதற்கு வேறு இல்லை.

**26. திருவடி யேசிவ மாவது தேரில்**
**திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்**
**திருவடி யேசெல் கதியது செப்பில்**
**திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே 138.**

**பதப்பொருள்** : தேரில் திருவடியே சிவமாவது – ஆராயின் ஒளியான திருவடியே சிவமாம், சிந்திக்கில் திருவடியே சிவலோகம் – எண்ணிப்பார்க்கின் அவ்வொளியே சிவன் உறைகின்ற உலகம், அது செப்பில் திருவடியே செல்கதி – அதனைச் சொல்லப்புகின் அவ்வொளியே சிவனை அடைவதற்குரிய நெறியாகும். உள்தெளிவார்க்கு திருவடியே தஞ்சம் – அகநோக்குடையார்க்கு ஒளியே புகலிடமாகும்.

**விளக்கம்** : அடி – திருவருள், ஒளி. **ஒளியின் உருவம் அறியில் ஒளியே** என்ற ஆசிரியர் வாக்கைக் காண்க.

**கருத்து** : திருவடியே சிவலோகத்துக்குச் செல்லும் நெறியாகவும், சிவமாகவும், புகலிடமாகவும் உள்ளது.

**27. தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே. 139.**

**பதப்பொருள்** : குருவின் திருமேனி காண்டல் தெளிவு – சிவகுருவைச் சோதிப்பிழம்பாகச் சிரசின்மேல் காணுதல் தெளிவினைத் தரும், குருவின் திருநாமஞ் செப்பல் தெளிவு – அக்குருநாதனின் திருநாமமாகிய அஞ்செழுத்தைச் செபித்தல் தெளிவினை நல்கும், குருவின் திருவார்த்தை கேட்டல் தெளிவு –அக்குருவினது உபதேசமொழியை, அஃதாவது

நாதத்தைக் கேட்பது தெளிவை உண்டாக்கும், குருவுரு சிந்தித்தல் தானே தெளிவு – இனி, சிவகுருவினது ஒளியான திருமேனியை இடைவிடாது நினைத்தல் மிக்க தெளிவினைத் தருவதாகும்.

**கருத்து** : சிவகுருநாதனால் தெளிவு உண்டாகும்.

**28. தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடுந்**
**தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடுந்**
**தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்**
**தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே. 140.**

**பதப்பொருள்** : தானே தனித்து எம்பிரான்தனைச் சந்தித்தே – ஆன்மா தானே தத்துவங்களை விட்டு இறைவனைத் தனியே சந்திக்கும்பேறு பெற்றால், புலன் ஐந்துந்தானே தன்வசம் ஆயிடும் – சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய ஐம்புலன்களின் வழி ஓடும் மனம் ஆன்மாவின் வசமாகிவிடும், புலன் ஐந்துந்தானே தன்வசம் போயிடும் – அவ்விஷய சுகங்களின் இயல்பு கெட்டுவிடும், புலன் ஐந்துந்தானே தன்னில் மடைமாறும் – அப்புலன்களே ஆன்மாவை இறைவன்வழி நிற்கச் செய்யும்.

**விளக்கம்** : ஐம்புலன் – சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய ஐந்து விஷய வாசனை. ஐம்பொறி – மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. ஐம்புலன் தன்வசம் ஆதலாவது, ஐம்பொறிகள் புலன்வழி ஓடாது ஆன்மாவின் வழி நிற்றல், மடைமாறலாவது, உலக போகத்தில் விருப்பமிராது பரபோகத்தில் விருப்பம் உண்டாதல்.

**கருத்து** : ஆன்மா தத்துவங்களை விட்டுச் சிவத்தைப் பொருந்தினபோது புலன்களின் சேட்டை அறும்.

**29. சந்திப் பதுநந்தி தன்திருத் தாளினை**
**சிந்திப் பதுநந்தி செய்யத் திருமேனி**
**வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்**
**புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே. 141.**

**பதப்பொருள்** : சந்திப்பது நந்திதன் திருத்தாளினை – இடைவிடாமல் கூடுவது சிவனது திருவடி, சிந்திப்பது நந்தி

செய்யத் திருமேனி – சிந்திப்பது அவனது சிவந்த திருமேனி, வந்திப்பது நந்தி நாமம் என் வாய்மையால் – நாவினால் தோத்தரித்து வணங்குவது அவனது திருநாமம், புந்திக்குள் நிற்பது நந்தி பொற்போதம் – என்னுடைய அறிவில் விளங்குவது சிவனது திருவடி ஞானமாகும்.

**விளக்கம்** : சந்தித்தலாவது, ஒளியான திருவடியைச் சிரசில் பெறுதல். சிந்தித்தலாவது, திருவடி உணர்வைப் பெறுதல். வந்தித்தலாவது, உடல் நினைவை விட்டுத் திருவடியை வணங்குதல். போதம் – ஞானம். சந்தித்து சிந்தித்து வந்தித்தால் திருவடிஞானம் உண்டாகும்.

**கருத்து** : திருவடிஞானம் பெற நந்தியை இடைவிடாது நினைத்திருக்க வேண்டும்.

**30. போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்**
**போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்**
**நாதன் நடத்தால் நயனங் களிகூர**
**வேதந் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. 142.**

**பதப்பொருள்** : போதந் தரும் எங்கள் புண்ணிய நந்தியை – மேன்மையான ஞானத்தை அளிக்கும் அறமே வடிவான சிவபெருமானை, போதந்தனில் வைத்துப் புண்ணியராயினார் – அறிவினில் வைத்து எண்ணிப் புண்ணியம் மிக்கோர், நாதன் நடத்தால் நயனம் களிகூர – நாதனது நடனத்தைக் கண்கள் களிகூரக் கண்டு, வேதம் துதித்திட விண்ணே போயடைந்தார் – நாதம் முழங்கப் பரகாய வெளியில் விளங்கியிருந்தனர்.

**கருத்து** : குருநாதன் உபதேசப்படி நந்தியை அறிவினில் தியானித்தவர் நாதசம்மியம் கிட்டி ஆகாய மண்டலத்தில் விளங்குவர்.

பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அருளிய
உபதேசம்

மனிதனாகப் பிறந்தால் மோட்சகதி தேட வேண்டும். மோட்சகதி அடையவேண்டும் என்றால், பிராணணாகிய மூச்சுக்காற்றைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். நாள்

ஒன்றுக்கு 21,600 முறை மூச்சுக்காற்று வந்து போகும். வந்து போகின்ற காற்று இரவு ஆறுமுறையும், பகல் ஆறுமுறையும் மாறும். அந்தக் காற்றைப்பற்றி அறிந்துகொள்ளாமல் இருந்தால், நாளுக்குநாள் நரை, திரை, மூப்பு வந்து மாண்டுபோவார்கள். அந்தக் காற்றை அறிந்துகொண்டவர்கள் மாண்டுபோக மாட்டார்கள்.

<u>திருமந்திரம் – பிராணாயாமம் – கவி : 575.</u>

**புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை**
**நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்**
**உறுப்புச் சிவக்கும் உரோமங் கருக்கும்**
**புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.**

உள்ளும் புறமுமாக வந்துபோகின்ற காற்றை, ஆசான் அகத்தீசரை வேண்டி பிராணாயாமம் செய்தால், அவரே மூச்சுக்காற்றோடு கலந்து புருவமத்தியாகிய சுழிமுனையில் ஒடுங்கி உடம்பில் உள்ள கசடுகளை அகற்றி, நரை, திரையை மாற்றி, ஒளி உடம்பு பெறச் செய்வார்.

<u>திருமந்திரம் – பிராணாயாமம் – கவி 566</u>

**புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்**
**கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்**
**துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்**
**உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே.**

புரவி என்பது மூச்சுக்காற்று. பறவையைவிட வேகமாகச் செல்லும் குதிரையாகிய மூச்சுக்காற்றை ஆசான் துணைகொண்டு புருவமத்தியாகிய சுழிமுனையில் செலுத்திவிட்டால், உள்ளே அமிழ்தபானம் சுரக்கும். அதை உண்டுவந்தால், பேரானந்தம் உண்டாகும் மற்றும் முதுமை மாறி இளமை உண்டாகும். இது ஆசான் அகத்தீசர் ஆசியில்லாமல் சித்திக்காது. எனவே ஆசான் அகத்தீசர் ஆசிபெற்றுச் செய்யவேண்டும்.

<u>திருமந்திரம் – கலை நிலை – கவி : 722</u>

**ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்**
**பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லீரேல்**

**நீராய யிரமும் நிலமாயி ரத்தாண்டும்**
**பேராது காயம் பிரான்நந்தி ஆணையே.**

பகலில் ஆறுமுறையும், இரவில் ஆறுமுறையுமாக மாறிமாறி இயங்கக்கூடிய காற்றை, புருவமத்தியாகிய சுழிமுனையில் செலுத்தினால், அந்தக் காற்று எங்கும் வெளிப்படாது உள்ளேயே தங்கிவிடும். அப்படிச் செய்தால், பலகோடி யுகங்கள் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று வாழலாம். இதே கருத்துகள் அடங்கிய மகான் அழுகண்ணர், மகான் கொங்கணர் அருளிய பாடல்கள்.

<u>அழுகணி சித்தர் பாடல் – கவி எண் : 6</u>

**எட்டாப் புரவியடி யீராறு காலடியோ**
**விட்டாலும் பாரமடி விதியிலே தான்மறித்துக்**
**கட்டக் கயிறெடுத்துக் கால்நாலுஞ் சேர்த்திருக்கி**
**அட்டாள தேசமெல்லாம் என்கண்ணம்மா**
**ஆண்டிருந்தா லாகாதோ.**

<u>மகான் கொங்கணர் அருளிய வாலைக்கும்மி – கவி எண் : 42</u>

**கட்டாத காளையைக் கட்டவே ணுமாசை**
**வெட்டவே ணும்வாசி யொட்டவேணும்**
**எட்டாத கொம்பை வளைக்கவே ணுங்காய**
**மென்றைக்கி ருக்குமோ வாலைப்பெண்ணே.**

மூச்சுக்காற்றைப் புரவியாகிய குதிரை என்றும், பறவை என்றும் கருஞ்சாரை, வெஞ்சாரை என்றும் பாம்பு என்றும், காளை என்றும், இன்னும் அனேக பரிபாசைகளாகச் சொல்லுவார்கள். இந்த மூச்சுக்காற்றை அறிந்து கட்டுவது எளிதல்ல. அப்படிக் கட்டினால் ஆசை அற்றுப்போகும். ஆசையை உண்டுபண்ணும் காமதேகம் நீங்கிவிடும்.

ஆகவே, இதையெல்லாம் இளமை இருக்கும்போதே ஆசான் அகத்தீசரைப் பூஜை செய்து ஆசிபெற்றுக்கொள்ளவேண்டும். ஆசி பெறாமல் காளையாகிய மூச்சுக்காற்றைக் கட்டமுடியாது. எனவே, ஆசான் அகத்தீசரைப் பூஜை செய்து கட்டமுடியாத காளையைக் (வாசியைக்) கட்டிக் கொள்ளவேண்டும்.

சுப்பிரமணியர் ஞான சைதன்யம் 108 – கவி எண் : 30

**வேண்டும் அகாரம் முடியாகப் பாவித்து வீரமுள்ள**
**தூண்டும் உகாரம் மவுனத்தி லேற்றிச் சுகம்பெறுவாய்**
**மீண்டும் வராது பிறவிக் கடலின் விபரஞ்சொன்னேன்**
**ஆண்டும் படைக்கின்ற பிரமத்தின் வீடு அதிசயமே.**

அகாரம் என்பது சுழிமுனையாகிய புருவமத்தியில் ஒடுங்குகின்ற காற்றாகும். உகாரம் என்பது கண்டஸ்தானத்தில் உள்ளடங்கும். இதை அறிந்தவர் மோன நிலையாகிய மௌன நிலையை அறிந்தவர் ஆவார். அவர்களே சமாதி நிலையையும் அறிந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் மீண்டும் பிறக்க மாட்டார்கள். அவர்களே எல்லாம்வல்ல பரப்பிரம்மம் ஆவார்கள்.

<u>பக்தி – சுப்ரமணியர் ஞான சைதன்யம் 108 – கவி எண் – 20</u>

**தயாபர மேயும்மை நம்பின பேர்க்கொரு தாட்சியுண்டோ**
**மயாபர மேயென் பிறவிக் கடலின் மருந்துசொல்லுந்**
**தியாபர மேயுள் ளிருதாள் வணங்கத் திருவருளும்**
**செயாபர மேயுந்தன் சேவடியே நம்பிச் சேவிப்பனே.**

மேற்கண்ட எல்லாவகையான சாதனங்களுக்கும், ஆசான் அகத்தீசர் ஆசி இருக்க வேண்டும். அவர் ஆசியைப் பெற்றுக்கொண்டால் ஞான வாழ்க்கைக்கு எவ்விதத் தடையும் இருக்காது. அவர்களே ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வதற்கு உரிய வகை தொகையை அறிந்தவர்கள் ஆவார்கள்.

எனவே, ஆசான் அகத்தீசர் ஆசிபெற்று பிறவா நிலையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மேற்கண்ட சாதனங்கள் அனைத்தும் எனது அனுபவத்தில் அறிந்தவை. ஆரம்ப காலத்தில் யோக நெறிபற்றி அறிந்து கொள்ள பல குருமார்களைத் தேடி அலைந்தேன். எவரும் எனக்குச் சொல்லவில்லை.

துறையூர் அவல்பட்டறைத் தெருவில் இருந்த சித்த தத்துவ நிபுணரும், சித்தமருத்துவ மேதையுமான திரு.

**சின்னசாமி சாஸ்திரி** அவர்கள்தான் எனக்கு யோகப்பயிற்சிப்பற்றிச் சொன்னார்கள். அவர் சொன்னதின் அடிப்படையில்தான் யோகப்பயிற்சி செய்து வருகிறேன். இன்னும் பூரண சித்திபெறவில்லை.

இந்தத் தவநூலை வெளியிட உதவியவர் இரா. மாதவன் ஆவார். பல்வேறு வேலைப்பளு இருந்தபோதிலும் சலிக்காமல் செய்துள்ளார். அவரும், அவரது குடும்பத்தார்களும் எல்லா வளமும் நலமும் பெற்று நீடு வாழவேண்டும் என்று நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

எனக்குப் போதிய கல்வி இல்லாததால் என்னுடைய அறிவுக்குத் தோன்றியபடி சிலகருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். அதில் குறையிருப்பது இயல்புதான், கற்றுணர்ந்த பெரியோர்களும் சான்றோர்களும் பொறுத்தருள வேண்டும் என்று திருவடி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**குறிப்பு :** ஆசான் மாணிக்கவாசகர் அருளிய அரிய தவநூலை அன்பர்கள் பெற்றுப் பயனடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தவம் என்பது மகான் மாணிக்கவாசகர் நாமத்தை **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் செய்வதும், அவர் திருவடியைப் பூஜிப்பதுமே ஆகும்.

மேற்கண்ட சாதனம் செய்ய விரும்புகிறவர்கள் தக்க ஆசான் துணைகொண்டுதான் செய்ய வேண்டும். நாமாகச் செய்வது நல்லதல்ல.

பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தின் சார்பாக வெளியிட்ட திருமந்திர நூலில் இருந்து திருவடிப்பேறு, தவதூடணம், உபதேசம் மற்றும் சில பகுதிகளை இந்த தவநூலுக்கு எடுத்துத் தொகுத்து ஆன்மீக அன்பர்கள் பயனடைய வெளியிட்டுள்ளோம். **நிறுவனத்தாருக்கு எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**......ரெங்கராஜ தேசிகன்.**

ஓம் ஸ்ரீ அகத்தீசர் துணை
அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!

சற்குருநாதா! சண்முகநாதா! அருட்பெருஞ்ஜோதி அகத்தீசாய நம!
சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரபிரம்மனே நம!

**இந்தநூல் தெய்வீகமானது. இதைப் பாதுகாத்துக்கொள்வது நல்லது. 11–05–1993, செவ்வாய்கிழமை** அன்று திருச்சி, புத்தூர் அகத்தியர் நாடி ஜோதிடர் AA. **தரணிபாலன்** மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க நிறுவனர், பரமானந்த சதாசிவ சற்குரு தவத்திரு. **ரெங்கராஜதேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகள் பற்றியும், ஓங்காரக்குடில் சிறப்புகள் பற்றியும் **மகான் பதஞ்சலி முனிவர் அருளிய அருள்வாக்கு.**

## மகான் பதஞ்சலி முனிவர் ஆசி காண்டம்

சத்தியத்தின் தெய்வமே சற்குருவே
சாகாத வரம் பெற்ற சாயுச்சயமே
முத்திக்கண்ட முனைப்பொருளே முதலே சோதி
முனிவர்முதல் தேவர்கட்கும் தலைவா போற்றி 01.

போற்றியே பதஞ்சலியான் பொன்மகர்க்கு
புகலுகிறேன் புளங்காகிதம் அடையத்தானே
ஏற்றமான விழாசெய்து அசத்திவிட்டான்
என்பிள்ளை இவனல்லோ பெருமை சொன்னேன் 02.

சொன்னாலே இதுபோல விழாவை எங்கும்
சுத்தமதாய் யான்கண்ட தில்லையப்பா
எந்நாளும் இவ்விழாபோல் இனி எவரும்
இவ்வுலகில் செய்வதற்கு இல்லை இல்லை 03.

இல்லையென்று உறுதிபடக் கூறுகின்றேன்
இதுபோல தீட்சைவிழா நடக்கும்பாரேன்
வல்லமைகள் பலவழங்கி வாழ்த்தும் சொல்வோம்
வரும்தனங்கள் பலகோடி சலனமில்லை 04.

சலனமில்லை உனக்குத்தான் நாங்கள் உள்ளோம்
சத்தியத்தின் கூடம்இது தர்மகூடம்
நலம் செய்யும் நாதாக்கள் சூழ்ந்தகூடம்
ஞானிகளின் அன்புக்கூடம் அறக்கூடம்தான் 05.

அறக்கூடம் பெருங்கூடம் ஞானக்கூடம்
**ஆதிஞான பண்டிதனும் தங்கும்கூடம்**
அறத்தை நிலைநாட்டி நிற்கும்கூடம்
**அன்புத்தாய் அகத்தீசன் தங்கும்கூடம்** 06.

தங்கும்கூடம் தங்கக்கூடம் தயாளகூடம்
தடையில்லா அறிவுசொல்லும் ஆற்றல்கூடம்
மங்காத ஒளிபடைத்த மாண்புகூடம்
மன்னர்களும் சரணடையும் மதிப்புக்கூடம் 07.

**மதிப்புக்கூடம் விதிஅதனை மாற்றும்கூடம்**
**மகான்களெல்லாம் குலாவிவரும் மங்களகூடம்**
**கதிஎன்று வந்தோரைக் காக்கும்கூடம்**
**கற்பக விருட்சமாய் விளங்கும் கூடம்** 08.

விளங்கும்கூடம் வெற்றிவேல் விளையாடும்கூடம்
வேதத்தின் நுட்பொருளை விளக்கும்கூடம்
களங்கமிலா உளங்கொண்ட கருணைக்கூடம்
**கருவூரார் தங்கிக்கொண்ட கருணைக்கூடம்** 09.

கருணைக்கூடம் கருணாநிதி (இராமலிங்கசுவாமிகள்) தங்கும்கூடம்
கலக்கத்தை வருவோர்க்குப் போக்கும்கூடம்
பெரும்வழியின் ரகசியத்தைச் சொல்லும்கூடம்
பேராற்றல் பெரும்ஞானம் அளிக்கும்கூடம் 10.

அளிக்கும்கூடம் அன்னைதந்தையாய் விளங்கும்கூடம்
**ஆன்மாவின் விளக்கத்தை உரைக்கும்கூடம்**
களிப்படைய பிள்ளைக்கு உரைத்தேன் ரெங்கா
கன்னி திங்கள் காலத்தில் மேன்மை மேன்மை 11.

மேன்மையான அற்புதத்தை அடைவாயப்பா
மேலான உனைவாழ்த்தி மகிழ்ச்சியோடு
யான்சொன்னேன் நூலதனை இதுதான் வாழ்த்து
யாதும் ஒருகுறை அண்டா காப்பேன் காப்பு 12.

காப்பிற்குக் கருணையுண்டு கலக்கமில்லை
கன்னிதிங்கள் பொன்திங்கள் சொன்னேனப்பா
வாப்பான விழாநடக்கும் மிகுசிறப்பாய்
வந்திறங்கி ஆசிஅதை அளிப்பேன் முற்றே. 13.

**.....சுபம்.....**

**17–03–2003 திங்கட்கிழமை** அன்று
திருச்சி, புத்தூர் அகத்தியர் நாடி ஜோதிடர் AA. **தரணிபாலன்**
மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க நிறுவனர்
பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜதேசிக சுவாமிகள்** அவர்களின்
தவச்சிறப்புகள் பற்றியும்,
சித்ரா பௌர்ணமி விழா சிறப்புகள் பற்றியும்
**மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய அருள்வாக்கு.**

## மகான் மாணிக்கவாசகர் ஆசி காண்டம்

சித்திக்கு மூலமான சிவத்தைப் போற்றி
**சித்திபெற்ற அரங்கனுக்கு மாணிக்கவாசகன் உரைக்க**
**உத்தமனே நான்வேறு நீவேறு அல்ல**
ஓங்காரக் குடிலமர்ந்த அரங்கா வாழ்க 01.

**கவிகளின் சாரம் :**

எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இயற்கைக் கடவுள், மனிதனைத் தோற்றுவிக்கும்போது, நரகத்தையும், சொர்க்கத்தையும் சேர்த்தே தோற்றுவிக்கிறார். ஆசான் மாணிக்கவாசகர் துணைகொண்டு நரகம் என்னும் தூலதேகமாகிய காமதேகத்தை நீக்கினால் சூட்சமதேகமாகிய

ஒளி உடம்பு ஆக்கம் பெறும். ஒளி உடம்பு ஆக்கம் பெற்றால் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலும் செய்யலாம். எல்லாம் வல்ல பரம்பொருள் தோற்றுவிக்கும்பொழுதே நரகத்தையும் சொர்க்கத்தையும் சேர்த்தே தோற்றுவித்ததன் காரணம், நரகமாகிய தூலதேகத் துணைக்கொண்டுதான் சொர்க்கமாகிய சூட்சும தேகத்தை ஆக்கம்பெறச்செய்ய வேண்டும். ஒன்றின் துணைக்கொண்டுதான் மற்றொன்றை ஆக்கம்பெறச் செய்யமுடியும்.

ஆகவே, ஓங்காரக்குடிலாசான் காமதேகமாகிய தூலதேகத்தை நீத்ததால், ஆசான் மாணிக்கவாசகரும் ஓங்காரக்குடிலாசானும் ஒன்றென்று ஆசான் மாணிக்கவாசகர் தம் சுவடிமூலம் அருளியுள்ளார்கள்.

நெல்லில் உமி நீங்கினால் அரிசி மீண்டும் முளையாததுபோல, தூலதேகமாகிய காமதேகம் நீங்கினால் மீண்டும் பிறவி இருக்காது. இதற்கு ஆசான் மாணிக்கவாசகர் ஆசியில்லாமல் முடியாது. எனவே, ஆன்மீகவாதிகள் ஆசான் மாணிக்கவாசகர் திருவடிகளைப் பூஜித்து நரகமாகிய காமதேகத்தை நீத்து, சூட்சமதேகமாகிய ஒளிதேகத்தை ஆக்கம்பெறச் செய்துகொள்ள வேண்டும்.

மகான் மாணிக்கவாசகர் ஆசி இல்லாமல் இந்த இரகசியத்தை அணுவளவும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது. எங்கும் நீக்கமற நின்று அருளுகின்ற இயற்கைக் கடவுளை ஞானிகள்தான் அறிந்துகொள்ள முடியும். எனவே, அவர்கள் ஆசிபெற நினைப்பதுதான் உண்மையான ஆன்மீகமாகும். இதை உணர்ந்துதான் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் மகான் மாணிக்கவாசகர் திருவடியை உருகிப் பூஜித்தார்கள். அதன் பயனாக மாணிக்கவாசகரும் ஓங்காரக்குடிலாசானும் வேறல்ல ஒருவரே என்று அருளியுள்ளார் மகான் மாணிக்கவாசகர்.

வாழ்கவே உன்தொண்டும் தவவாழ்வும்
வளமோடும் செழிப்படைய எந்தனாசி
தாழ்வில்லா குடில்விருத்தி பெருமைஓங்க
தவநூலும் வெளியிட சித்தர்நாங்கள் 02.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடில் உயரவும், தொடர்ந்து அறப்பணிகள் நடக்கவும், குடிலாசான் மேற்கொள்ளும் தவமுயற்சி வெற்றிபெறவும், உண்மை ஆன்மீகம் உலகெங்கும் பரவவும், சித்தர்கள் ஆசி உண்டென்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

சித்தர்நாங்கள் திட்டமிட்டு உள்ளோம் இப்போ
செல்வவளம் செழிப்போடு குடிலும்ஓங்க
சுத்தமுடன் உலகோரைக் கூட்டி நாங்கள்
சிறப்பாக உன்பெருமைதனைப் பேசி 03.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில் தொடர்ந்து அறப்பணிகள் நடக்கவும், செல்வ வளம் பெருகவும், உலக மக்கள் எல்லோரும் ஞானிகள் திருவடியைப் பூஜிக்கவும், ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கப் புகழ் உலகெங்கும் பரவவும் சித்தர்கள் எல்லோரும் திட்டமிட்டுள்ளதாக மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

பேசியே உன்னையும் வெளிக் காட்டி
பாக்கியமாய் அற்புதங்கள் குடிலில்நடக்க
**மாசில்லா வள்ளல்அருளிய வகையும்ஒன்று**
**மேவிட்ட உரைநடைப் பகுதிநூலை 04.**

ஓங்காரக்குடிலாசான் தவவாழ்க்கையில் முன்னேற்ற மடையவும், உண்மை ஆன்மீகம் உலகெங்கும் பரவவும், மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய திருஅருட்பா உரைநடைப் பகுதியை வெளியிட வேண்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**நூலிதையே வையகத்தோர் உய்யவே**
**நலமாக பலமாந்தர் நூலைப்பெற்று**
**சளைக்காமல் மகிழ்ந்திடவே யாவருக்கும்**
**சித்திஞானம் மெய்ஞ்ஞானம் யாவருக்கும்கிட்டும். 05.**

மகான் இராமலிங்கசுவாமிகள் அருளிய திருஅருட்பா உரைநடைப் பகுதியில் அறம், பொருள், இன்பம், வீடு அல்லது

சரியை, கிரியை, யோக, ஞானம் ஆகிய அனைத்தும் இருப்பதால் ஆன்மீகவாதிகள் எளிதில் உண்மைப்பொருளை அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளலாம் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

கிட்டும்தான் சித்தர்களின் கருணையாசி
கீர்த்திபல பலவளங்கள் பெறுவாரப்பா
இட்டமுடன் இவைநூலும் வருடைதிங்கள்(சித்திரை மாதம்)
இயம்பிட்ட முழுமதி நாளதனில் 06.

16.04.2003 சுபானு வருடம், சித்திரை மாதம் 3–ஆம் தேதி புதன்கிழமை, சித்ரா பௌர்ணமி அன்று திருஅருட்பா உரைநடைநூலை ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம் பெற்று, அதில் உள்ள கருத்துக்கள்படி முயற்சித்தால், எல்லா ஞானிகளும் மனமுவந்து அருள் செய்வார்கள். அதன்மூலம் பல நலமும் வளமும் பெற்று மரணமில்லாப் பெருவாழ்வு பெறலாம் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

நாளதனில் குடிலாசான் குடில்தன்னில்
நடக்கின்ற விழாதன்னில் அற்புதங்கள்
கள்ளமில்லா பலமாந்தர் கூட்டம்கூடி
குடிலதனில் நாடிநிற்பார் மிகையுமாக 07.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலாசானும், தொண்டர்களும் நரகத்தையும் சொர்க்கத்தையும் அறிந்தவர்கள் ஆவார்கள். இவர்கள்தான் சன்மார்க்கப் பற்றுக்கொண்ட ஆன்மீகவாதிகளுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள். அவர்களை நாடிவந்தால், ஆன்மீகவாதிகள் உண்மைப்பொருளை அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள முடியும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

மிகையாக பலஏற்றம் அன்னாள்உண்டு
இயம்புகிறேன் ஓங்காரக் குடிலில்இனி
நிகழ்த்திடுவாய் அருட்பா வகுப்புபாடம்
நலமாக உன்தொண்டர் யாவருமே 08.

திருஅருட்பா உரைநடைப்பகுதியை அன்பர்களுக்கு அதன் விளக்கத்தைச் சொல்லவேண்டும் என்றும், மேலும் மகான் மாணிக்கவாசகரும், ஆசான் இராமலிங்க சுவாமிகளும் மற்றுமுள்ள அனைத்து ஞானிகளும், சித்ரா பௌர்ணமியன்று ஓங்காரக்குடிலில் கூடி அருளாசி வழங்குவதாக மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**யாவருமே வள்ளல்நூலை வணங்கிப்போற்றி**
**யோக்கியமாய்த் தொழுதிடல் வேண்டுமப்பா**
பவ்வியமாய் அருட்பா நடத்தும்வேளை
பகர்ந்திட்ட சத்விசாரம் செய்திடல் வேண்டும் 09.

அன்பர்கள் திருஅருட்பா உரைநடைப்பகுதி நூலைத் தொட்டு வணங்கித்தான் படிக்க வேண்டும். அந்நூலைத் தொடும்போதே, மகான் மாணிக்கவாசகரும், ஆசான் இராமலிங்கசுவாமிகளும் மற்றும் உள்ள ஞானிகளும் சூழ்ந்து அருளாசி வழங்குவதால் முன்செய்த பாவங்கள் நீங்கி, படிப்பவர்களுக்கு ஞானமும் சித்திக்கும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**சத்விசாரமே இவ்வுலகில் சாகாக்கல்வி**
**செழிப்புபல பெற்றிடத்தான் இவையும் சொன்னேன்**
சுத்தமுடன் நெறிதவறா அருட்பாநடத்த
சுபம்பலதும் குடில்தனக்கு ஏற்படும்தான் 10.

அசத்து என்பது காமதேகமாகிய தூலதேகம். சத்து என்பது சூட்சமதேகமாகிய ஒளிதேகம். இதை அறிந்து கொள்வதே சாகாக்கல்வி ஆகும். இதற்கு சாகாக்கல்வியை அறிந்த மகான் மாணிக்கவாசகரையும், ஆசான் இராமலிங்க சுவாமிகள் திருவடிகளையும் பூஜித்தால்தான் சாகாக்கல்வியைப்பற்றி அறிந்துகொள்ள முடியும்.

சாகாக்கல்வி என்பது சாகாக்கால் ஆகும். அதுவே வேகாத்தலை, போகாப்புனலுமாகும். இதையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும் என்றால் எந்த அளவிற்கு ஞானிகள்திருவடிகளைப் பூஜிக்கிறார்களோ அந்த அளவிற்கு அறிந்துகொள்ள முடியும். இதை அறிந்தவர்கள்தான் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளும் தொண்டர்களும் ஆவார்கள். இவர்கள் நடத்தும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க நிலை உயர்ந்தால் உலக மக்கள் நிலை உயர்வார்கள். ஆசான் இராமலிங்கசுவாமிகள் திருவடியே சாகாக்கல்வியாகும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

தானழகாய் திங்களுக்கு இருமுறைதான்
தம்பனும் (தம்பையா) குடிலதனை நாடிவந்து
கண்ணியமாய் அருட்பாவின் பெருமைபேசி
குடிலதனில் அருட்பாவை போதனைசெய்ய 11.

தஞ்சையில் அருட்பெருஞ்ஜோதி அறக்கட்டளை அமைப்பாளரும், தொடர்ந்து பல அறப்பணிகள் செய்துவரும் திரு. தம்பையா அவர்கள் மாதம் இருமுறை ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலுக்கு வந்து திருஅருட்பா விளக்கம் தரவேண்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள். மேலும், திரு. தம்பையா அவர்கள் சித்த தத்துவத்தை நன்கு அறிந்தவர் ஆவார். அவர் திருஅருட்பாவிற்கு விளக்கம் தந்தால் தொண்டர்களும் உண்மைப்பொருளை அறிந்துகொள்ள முடியும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

போதனையால் பாக்கியங்கள் உண்டுசொல்வேன்
போதனையும் செய்யும் தம்பனுக்குப்
பேதமில்லா போக்குவரக் கூலியாய்
பண்புடனே நூற்றெட்டு ஈயவேண்டும் 12.

சித்த தத்துவ நிபுணர் திரு. தம்பையா அவர்கள் மாதம் இருமுறை ஓங்காரக்குடிலுக்கு விஜயம் செய்யும்பொழுது

போக்குவரத்துச் செலவுக்குத் தரவேண்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

வேண்டியவார் இனிநீயும் அருட்பாவகுப்பை
உத்தமனே என்முன்னே நின்றுநீயும்
தொண்டருடன் போதனைகள் செய்யவேண்டும்
தரணியிலே சித்திரை முழுமதியன்று 13.

சுபானு வருடம் சித்திரை மாதம் 3–ஆம் தேதி, சித்ரா பௌர்ணமி அன்று மகான் மாணிக்கவாசகரை ஓங்காரக்குடிலாசான் இதயத்தில் நிறுத்தி, தொண்டர்களுக்குத் திருஅருட்பாவிற்கு விளக்கம் தரவேண்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**முழுமதியில் உலகோர்க்கு நற்செய்திஒன்றை**
**மேன்மையுடன் உரைத்திடுவேன் நலங்கள்பெற**
தாழ்வில்லா ஓங்காரக் குடில் தன்னில்
தவநூலும் ஆசானின் கரம்தன்னால் 14.

மகான் மாணிக்கவாசகர் சித்ரா பௌர்ணமி அன்று உலகோர்க்கு ஒரு நற்செய்தியைத் தருவதாக அருளியுள்ளார்கள். மேலும், இந்த அரிய தவநூலையும் மற்றும் திருஅருட்பா உரைநடை நூலையும் ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் தம்கரங்களால் அன்பர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**கரம்தன்னால் வாங்குவோர் யாவருக்கும்**
**குவலயத்தில் தலைவனாசி கிட்டுமென**
**பார்உலகில் மூலரும் ஆசிதந்தார்**
**பூதலத்தில் ஆசான்நடத்தும் விழாதன்னில் 15.**

சித்ரா பௌர்ணமி அன்று ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம் இந்த அரிய தவநூலையும், திருஅருட்பா உரைநடைப்பகுதி நூலையும் பெற்றுக்கொண்டால், மகான் மாணிக்கவாசகர் ஆசியும், ஆசான்

திருமூலதேவர் ஆசியும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகளின் அருளாசியும் கிட்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

விழாதன்னில் தமிழ்வாணன் லக்கதனம்(ஒரு லட்சம்) ஈந்து
விளம்பிட்ட தவநூலை ஆசானால்பெற்று
அழகாக ஞானசித்தி காணவேண்டி
அறிவித்தேன் மாணிக்கவாசகன் வாக்குஇன்று 16.

மகான் மாணிக்கவாசகர் அவர்கள், மலேசிய அகத்தியர் சன்மார்க்க சங்கத் தலைவரும் தியாகியுமான தமிழ்வாணன் அவர்கள், இந்த தவ நூலையும், திருஅருட்பா உரைநடைப்பகுதி நூலையும் ரூபாய் ஒரு இலட்சம் குரு காணிக்கையாகக் கொடுத்து ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம் பெற்றுக்கொண்டால் மெய்ஞானம் சித்திக்கும் என்று அருள்வாக்கு அருளியுள்ளார்கள். இது நூலின் உயர்வு கருதியே அன்றிப் பொருள் கருதியது அன்று.

வாக்குப்படி வள்ளல்பெருமான் சபைத்தலைமைஏற்க
வளமோடு சன்மார்க்கம் தழைத்துஓங்க
தக்கதொரு தம்பனும் ஐசகத்திரம்ஈந்து
தவநூலை வாங்கிடவே நன்மைநன்மை 17.

சித்ரா பௌர்ணமி அன்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமி அவர்கள், ஓங்காரக்குடிலில் நடைபெறும் விழாவிற்குத் தலைமைதாங்கி ஆசி வழங்குவதால், திரு. தம்பையா அவர்கள் ரூபாய் ஐந்தாயிரம் கொடுத்து இந்தத் தவநூலையும், திருவருட்பா உரைநடைப்பகுதி நூலையும் ஓங்காரக்குடிலாசானிடம் பெற்று ஆசிபெற வேண்டும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

நன்மைதான் தமிழ்வாணன் துணையாகவும்
நாட்டவே ஆனந்தன் சிவகாமிபக்தா (பக்தவத்சலம்)
முனியாண்டி கிறித்தோபர் சையத்தும்
மேவிட்ட சீலனுடன் கிருட்டிணகுமார் 18.

குமாருடன் கிருட்டிணன் யோகமலர்
குறித்திட்ட செல்வம் திருமாறன்
கோமதியாம் ராசேசுவரி மாரிமுத்தும்
காளையனாம் ரகுநாதன் யாவருமே 19.

யாவருமே இருநூற்றி வெள்ளிதனம்
யோக்கியமாய் ஈந்துமே தவநூல்பெற்று
தவசித்தி ஆசிகாண வாக்குதந்தேன்
தெரிவிக்க இத்தேசத்தில் உள்ளமக்கள் 20.

மேற்கண்ட 18, 19, 20 கவிகளில் சொல்லியபடி தமிழ்வாணன் தம்பி ஆனந்தனும் மற்றும் சிவகாமி பக்தவத்சலம், முனியாண்டி, கிறிஸ்தோபர், சையத், குணசீலன், கிருஷ்ணகுமார் மேலும் கிருஷ்ணன், யோகமலர், செல்வம், திருமாறன் மற்றும் கோமதி, ராஜேஸ்வரி, மாரிமுத்து மேலும் ரகுநாதன் உட்பட 16 அன்பர்களும் தவநூலையும், திருஅருட்பா உரைநடைப்பகுதி நூலையும் ஓங்காரக்குடிலாசானிடம் பெற்றுப் பயனடையும்படி மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

உள்ளமக்கள் சகத்திரட்டம் (ரூ 1,008) மேல்ஈந்து
உவகையுடன் தவநூலும் பெறவேண்டும்
கள்ளமில்லா பிறதேச மக்கள்யாவும்
குறித்தபடி ஐசகத்திரம் (ரூ 5,000) முதல் 21.

முதலாக தசசகத்திரம் (ரூ 10,000) வரைஈந்து
மேதினியில் ஆசானின் சுமையைக் குறைக்க
பேதமில்லா அவர்வாழ்வும் குடும்பம் ஓங்கும்
பகரவே குடில்தொண்டர் யாவருமே 22.

மேற்கண்ட 21, 22 ஆகிய கவிகளில் உள்நாட்டு அன்பர்களும், வெளிநாட்டு அன்பர்களும் ரூபாய் 1,008 முதல்

ரூபாய் 5,000 அல்லது ரூபாய் 10,000 வரை குரு காணிக்கை கொடுத்து, ஓங்காரக்குடிலாசானிடம் நூல்களைப் பெற்றுக்கொண்டு ஆசிபெறலாம் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

**யாவருமே தவநூலும் பெற்றிடவேண்டும்**
**யூகமுடன் தவநூலும் பெற்றவர்யாரும்**
**தவவாழ்வு அவரவர்க்கும் கிட்டுமப்பா**
**தானுரைக்க ஓங்காரக்குடில் சித்திபுரமாய்** 23.

**சித்திபுரம்** (துறையூர் ஓங்காரக்குடில்) **தட்சிணஞான சிதம்பரமாய்**
**சிறப்போடு விளங்கியே நிற்கும்திண்ணம்**
சுத்தமுடன் இனிஉனக்கு அச்சம்வேண்டாம்
சஞ்சலங்கள் ரணருணங்கள் உன்னை அண்டா 24.
(கடன்சுமையால் மனவாட்டம்)

மேற்கண்ட 23, 24 ஆகிய கவிகளின்படி ஓங்காரக்குடிலாசானிடம் மேற்கண்ட நூல்களைப் பெற்றுக்கொண்டால் சகல சித்திகளும் பெறுவார்கள். மேலும் துறையூர் ஓங்காரக்குடில் சித்திபுரம் என்றும் மற்றும் தட்சிண ஞானசிதம்பரம் என்றும் விளங்கும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள். துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடிலை சித்திபுரம் என்றும் தட்சிண ஞானசிதம்பரம் என்றும் மகான் மாணிக்கவாசகர் அருளியதற்குக் காரணம், தூல சூட்சமம் என்பது நரகமும் சொர்க்கமும் ஆகும் தூலம் என்பது மும்மலமாகிய புறவுடம்பு, சூட்சமம் என்பது ஒளிவுடம்பாகிய ஞானதேகமாகும். எனவே தூலசூட்சமத்தை அறிவதே நரக சொர்க்கத்தை அறிவதாகும். இதை அறிந்த சங்கம்தான் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் என்பதால்தான் ஓங்காரக்குடிலை உள்ளமாகிய சபை என்றும், தட்சிண ஞானசிதம்பரமாக மகான் மாணிக்கவாசகர் அமைத்துள்ளார்கள். மேலும், பெறுதற்கரிய மானுடதேகம் பெற்றவர்கள் அதன் பெருமையை உணர்ந்துகொண்டால் அதுவே சொர்க்கமாகும், அறியாவிட்டால் அதுவே நம்மை வஞ்சிக்கும் நரகமாகும். ஓங்காரக்குடில் என்பது சுத்த தேகத்தில் விளங்கும் சுத்த உள்ளத்தைக் குறிப்பதாகும்.

உன்னைஅண்டா நானுன்னைக் காத்துக்கொள்வேன்
உன்னிடம் எமனையே நெருங்கவிடாமல்
கண்ணியமாய்க் காத்துக்கொள்ளும் சித்தர்நாங்கள்
கலக்கமில்லாத் தவவாழ்வும் சித்திபெற 25.

சித்திபெறத் துணைஇருப்போம் அச்சம்வேண்டாம்
சுங்கவழி அச்சங்கள் உனக்குவேண்டாம்
பேதங்கள் கொள்ளாதே சுங்கத்தைப்பற்றி
பாக்கியமே நீபெறுவாய் மற்றவை அடுத்துரைப்போம்
ஆசிமுற்றே 26.

25, 26 கவிகளில் ஓங்காரக்குடிலாசானுக்கு கடன் சுமையாலோ மற்றும் எந்தவகையாலும் இடையூறு வராமல் சித்தர்கள் அனைவரும் பாதுகாப்போம் என்று மகான் மாணிக்கவாசகர் மனமுவந்து அருளியுள்ளார்கள்.

**குறிப்பு 1 :** மகான் மாணிக்கவாசகர் பெயதை அடிக்கடி இதில் பயன்படுத்துவதன் நோக்கம், அவரின் நாமத்தை திரும்பத்திரும்ப சொல்லுவதால் அருள்பலம் கூடும் என்பதற்காக. மேலும் மனிதனாகப் பிறந்தால் மோட்சமாகிய வீடுபேறு அடையவேண்டும். அதற்கு ஒரே உபாயம் மகான் மாணிக்கவாசகர் திருவடியைப் பூஜிக்க வேண்டும். **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று காலை, மாலை 10 நிமிடம் நாமஜெபம் செய்துவர வேண்டும். நாமஜெபம் செய்யச்செய்ய சகல தேவ சாஸ்திரங்களைப் படித்து அறியமுடியாத இரகசியங்களை அறிந்து கொள்ளலாம். நாமஜெபம் செய்யாமல் ஆகம, வேத மற்றும் எல்லாவகையான சாஸ்திரங்களையும் படித்தாலும் அணுவளவும் அறிந்துகொள்ள முடியாது. அறிந்துகொள்ள ஒரே உபாயம் திருவடி பூஜைதான்.

**குறிப்பு 2 :** மகான் மாணிக்கவாசகர் அருளிய தவநூலையும் மற்றும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பா உரைநடைப்பகுதி நூலையும் வருகின்ற 16.04.2003 புதன்கிழமை

சித்ரா பௌர்ணமி அன்று ரூபாய் 1,008 குருகாணிக்கையாகப் பரமானந்த சதாசிவ சற்குரு **தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம்** கொடுத்துப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தாங்கள் கொடுக்கும் தொகை இங்கு நடைபெறுகின்ற அன்னதானத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வருகின்ற சித்ரா பௌர்ணமி அன்று மகான் மாணிக்கவாசகரும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமிகளும், மகான் திருமூலதேவரும் ஓங்காரக்குடிலில் இருந்து அருளாசி வழங்குவதால் குருநாதர் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகளிடம் இந்த அரிய தவநூலையும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் அருளிய திருவருட்பா உரைநடைப்பகுதி நூலையும், ரூபாய் 1,008 –ஐ குருகாணிக்கையாகக்கொடுத்து ஆசிபெற்றால் குடும்பத்தில் எல்லா வளமும் நலமும் பெற்று ஞானமும் பெறலாம். மேலும், வியாபாரம், விவசாயம், தொழில், உத்யோகம், நல்லபடி நடைபெறும். செல்வம் பெருகும், வறுமை நீங்கும், கடன்சுமை நீங்கும், உடல் ஆரோக்கியமும் நீடிய ஆயுளும் உண்டாகும், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும், பண்புள்ள புத்திரப்பாக்கியமும் தோன்றும், இன்னும் பல நன்மைகளும் உண்டாகும். எனவே, அரிய தவநூலையும், திருஅருட்பா உரைநடை நூலையும் பெற்று ஆசிபெறும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**19.03.2003, புதன்கிழமை** அன்று

திருச்சி, புத்தூர் அகத்தியர் நாடி ஜோதிடர் **AA. தரணிபாலன்** மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க நிறுவனர் பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகள் பற்றியும்,

சித்ரா பௌணர்மிவிழா சிறப்புகள் பற்றியும்

**மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய அருள்வாக்கு.**

## மகான் மாணிக்கவாசகர் ஆசி காண்டம்

பாதிமதி அணிந்திட்ட பரம்பொருளே
பாடுவது மாணிக்க வாசகன் உனக்கு
சோதிநிலை நீஅடைய சுகமாய்ச் சொன்னேன்
சுத்ததேகம் நீபெற்றாய் அரங்கா வாழ்க 01.

வாழ்கவாழ்க வாழ்த்துகிறேன் யானும்உனக்கு
வையகத்தில் உன்குடிலும் விருத்திகண்டு
சேமங்கள் அடைந்திடத்தான் வாக்குதந்தேன்
சுத்ததேகம் பெற்றிட்ட அரங்காகேளாய் 02.

அரங்கனே நீமகிழ்ச்சி பெற்றிடத்தான்
அடுத்தாண்டு சுபானு சித்திரைதிங்கள்
பௌர்ணமியில் நற்செய்தி உனக்குச் சொன்னோம்
பக்குவமாய் யானுரைத்தேன் நீயும்மகிழ 03.

**நீமகிழ சுத்தஉட்ணம் உனக்குஓங்க**
**நானிலத்தில் சூக்குமதேகம் ஆக்கம்பெற**
**சேமமுடன் உன்விழித் திரைநீங்க**
**செகத்தோர்கள் குடிலன்பர் யாவருமே 04.**

**யாவருமே அளவற்ற நன்மைபெற**
யுகம்தன்னிலே உன்னாலே வெளியான
தவக்குடிலில் வெளியான மகாமந்திரம்
தரணியிலே பலதேச மாந்தரும் சொல்லி 05.

ஓங்காரக்குடிலாசான் உலக மக்களுக்கு வெளியிட்ட **சிவயசிவ சிதம்பர இராமலிங்காய பரப்பிரம்மனே நம** என்ற மகாமந்திரத்தை அன்பர்களும் தொண்டர்களும், உலக மக்களும் நாமஜெபம் செய்து பல நன்மைகளை அடைந்து வருகிறார்கள்.

சொல்லியே யாவருமே நலம்காண்பதால்
செகம்தன்னிலே புண்ணியம்பல உனக்குமிகுந்து

நலமாக உன்தேக ஆணிதன்னை
நீங்கிஉன்னை உலகாளும் அதிகாரம்கிட்டும் 06.

**கிட்டும்தான் உன்னையே துதித்தோரும்**
**குடில்தன்னைத் தேடியே வந்தோர்யாவரும்**
**இட்டமுடன் எல்லையில்லா ஆனந்தம்காண்பர்**
**இருளில்லா வாழ்வுதான் யாவருக்கும் திண்ணம்** 07.

திண்ணமதாய் தவநூல் வெளியிட்டால்
தேசத்தில் பலரும் மெய்ஞ்ஞானம் அறிந்து
கண்ணியமாய் கருத்துணர்ந்து துதிசெய்திட
குவலயத்தில் அவர்குடும்பம் ஓங்கிநிற்கும் 08.

ஓங்கியே அக்கணமே ஞானஉட்ணத்தை
ஓதிடுவோர் புண்ணியமும் காண்பார்நன்றாய்
பாங்காக சுபானு ஆண்டுதன்னில்
பெருமானும் உனக்குவந்து காட்சிதந்து 09.

காட்சிதந்து அருள்பெறுவாய் அக்கணமே
குடில்தன்னில் நன்மைபல ஓங்கிநிற்கும்
பாடவே ஓர்விளக்கம் நீயும்கேளாய்
பண்பாக அருட்பெரும் சோதிமந்திரத்தை 10.

**மந்திரத்தைக் குடிலன்பர் யாவருமே**
**மேதினியில் உனக்காக தினம்தினமும்**
**சுந்திரமாய் நூறுமுறை செபிக்க வேண்டும்**
**செபம்செய்ய உன்தேகத்தில் ஒளிநன்றாய்** 11.

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்களும் அன்பர்களும், தினம்தினம் **அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி, தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி** என்று இந்த மகாமந்திரத்தை நூறுமுறை செபித்தால், ஆசான் விழித்திரை நீங்கி ஞானசித்தி பெறுவார்கள். அதனால் குடில் அன்பர்களும் உலக மக்களும் பலநன்மைகள் பெறுவார்கள்.

நன்றான அற்புதங்கள் நீயும்காண்பாய்

நன்றாக இவைஉரைப்போர் யாவருக்கும்
மேன்மைபெற நாங்களும் அருள்புரிவோம்
மகிழ்ச்சியோடு ஆனந்தம் அடையச்செய்வோம் 12.

மேற்கண்ட அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை ஜெபிப்போர்களுக்கு எல்லா ஞானிகளும் உற்றதுணையாக இருந்து அருள்செய்வார்கள்.

**செய்திடுவோம் வறுமையில்லா வாழ்வும்பெற**
**செபம்செய்ய யாவருக்கும் நன்மைநன்மை**
ஐயங்கள் அண்டாமல் குடிலும்ஓங்கும்
அறிவித்த உரைநடை நூல்தன்னை 13.

**நூல்தன்னை வாங்கியே உரைப்போர்க்கெல்லாம்**
**நட்டமில்லா பொருள்வளங்கள் யாவரும்பெறுவார்**
**செல்வங்கள் செழிப்போடு உரைப்போர் குடும்பம்**
**சிறந்தோங்கி விளங்கிநிற்கும் வாசன்வாக்கு** 14.
(மாணிக்கவாசகர் வாக்கு)

**வாக்குப்படி வந்திடாது பிணியும்கண்டம்**
**வளர்ச்சிபல அடைந்திடுவார் நிச்சயமாய்**
மகனேநீ மண்ணாள வந்தவன் நீ
முன்னும்நீ தரணியை ஆண்டவன்தான் 15.

**ஆண்டகாலம் கருவூரார்க்குப் பணிவிடைகள்**
**அக்கனமே தொண்டுபல செய்ததனால்**
**ஆண்டுலகில் இந்நாளில் தரணியாள**
**அறிவித்தோம் நற்செய்தி உனக்குச் சொன்னோம்** 16.

குருநாதர் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்கள், இராஜராஜ சோழனாக வாழ்ந்த காலத்தில், மகான் கருவூர் முனிவருக்குத் தொண்டு செய்ததால் இக்காலத்தில் உலகாளும் வாய்ப்பை மகான் கருவூர் முனிவர் குருநாதருக்கு அருளியுள்ளார்கள்.

**உனக்குஇனி எதிரியேது துன்பமேது**
**உனைஎதிர்க்க எவன்இருக்கான் இவ்வுலகில்**

**உன்னோடு எக்கனமும் வாசன் இருக்க** (மாணிக்கவாசகர்)
**உலகத்தில் உனையாரும் எதிர்க்கமாட்டார்** 17.

எதிர்போரின் வாழ்வுநிலை உனக்கேதெரியும்
எடுத்துரைக்க நானும்வான் கலந்ததுபோல்
சுத்தமுடன் நீயும் வான்கலந்து
சிறப்பாக என்னிடத்தில் அடைவாய்மைந்தா 18.

மைந்தனே கரிசாலை பொடிஅதனை
மேன்மையுடன் வெந்நீரில் கலந்துபருகு
சுந்திரமாய் இவைபருக உன்தன்தேகம்
சுத்தமுடன் தேகசுத்தி உட்ணமாகும் 19.

ஆகிடவே தினந்தினமும் அற்புதம்பல
அழகாக நடந்திடும்தான் நீயே உணர்வாய்
அக்கணமே தூதுவளை முசுமுசுக்கை
அகச்சலனம் கொள்ளாமல் தினம்உண்ண 20.

தினம்உண்ண உன்மலம் சுத்தியாகும்
திடமுடனே தேகதிடம் பெறுவாய்நன்றாய்
உனக்குத்தான் முழுமதியும் நாளதனில்
உன்முன் சோதிப்பிரகாசம் தோன்றும் 21.

தோன்றிவரும் பிரகாசம் உன்உடலோடு
தடையில்லா ஐக்கியமாய் அமர்ந்திடும்தான்
**நண்ணயமாய் உரைத்திட்ட நூல்கள் யாவும்**
**நடராசன் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்** 22.

வேண்டியவார் அருட்பெரும் சோதிஉரைநடை நூலும்
உத்தமமாய் உரைத்திடத்தான் மாரிக்கொட்டும்(மழை பெய்யும்)
மண்ணுலகில் பிணிபிடை பஞ்சம்விலகி
மக்களெல்லாம் நன்மையே நாளும்பெறுவார் 23.

பெற்றிடுவார் பாக்கியங்கள் ஞானசித்தி
**பகர்ந்திட்ட உரைநடை நூல்பொறுப்பை**
**அற்புதமாய் நடராசன் ஏற்கவேண்டும்**

அரங்கனுக்கு ஆசிதந்தேன் மற்றவை அடுத்து உரைப்பேன்
ஆசிமுற்றே. 24.

**22.03.2003, சனிக்கிழமை** அன்று
திருச்சி, சங்கிலியாண்டபுரம் அகத்தியர் நாடி ஜோதிடர்
V.T.பரணீதரன் மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க
நிறுவனர் பரமானந்த சதாசிவ சற்குரு
தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின்
தவச்சிறப்புகள் பற்றியும்,
சித்ரா பௌர்ணமி விழா சிறப்புகள் பற்றியும்
**மகத்துவம் பொருந்திய அகத்திய முனிவர் அருளிய அருள்வாக்கு**

**மகத்துவம் பொருந்திய அகத்தியர் ஆசி காண்டம்**

வள்ளலின் அவதார அரங்கா போற்றி
வள்ளலாராய் வாழ்ந்திட்ட அரசா போற்றி
வள்ளல் பெருமானே தேசிகா போற்றி
வள்ளலே நின்திருவடிகள் போற்றி போற்றி 01.

போற்றியே அகத்தியர்யான் ஆசிதன்னை
பூவுலகில் அளித்திடுவேன் இன்றுநாளில்
பார்காக்க பெரும்தொண்டை புரிந்த தேவா
பாடிவைத்தாய் ஞானவழி உபதேசத்தை 02.

உபதேசமும் அருட்பா என்று விளங்கும்
உந்தன் முற்பிறவி வள்ளல் பெருமான்
உபதேச நூலை முழுமையாக அச்சிட்டு
உலகோர்க்கு வழங்கிடவே ஆசியுண்டு 03.
**உண்டான வள்ளல் உன் கரத்தால் வாங்க**
**உயர்வான தலைவனாசி கிட்டுமப்பா**
கொண்டுரைத்த தகர்திங்கள் (சித்திரை மாதம்) முழுமதிநாளில்
குவலயத்தில் தவநூலை மக்கள் பெற்று 04.

பெற்றுமே ஞானசித்தி காணவேண்டி
பேசினேன் அகத்தியர்யான் இன்றுநாளில்
உற்றதொரு தமிழ்வாணன் லக்கதனம் ஈந்து (ஒரு இலட்சம்)

உவந்திட்ட தவநூலை பெறுதல் வேண்டும் 05.

வேண்டியே வள்ளல் உன் தலைமை ஏற்று
வளமோடு சன்மார்க்கம் தழைத்து ஓங்க
தொண்டருடன் தம்பனுமே (தம்பையா) ஐசகத்திரம் ஈந்து (ரூ5,000)
தவநூலை பெற்றிடவே நன்மை நன்மை 06.

நன்மையே பிறதேச மக்கள் யாவும்
நானிலத்தில் ஐசகத்திரம்(ரூ5,000)முதல் தசசகத்திரம்வரை(ரூ10,000)
நன்மைபெற ஈந்துமே பெற்று நின்றால்
நலமாகும் அவர்வாழ்வும் குடும்பமும் ஓங்கும் 07.

ஓங்குமே தொண்டருடன் உள்நாட்டு மக்கள்
உவகையுடன் சகத்திரட்டம் (ரூ 1,008) தனம்மேல் ஈந்து
இங்கிதமாய் தவநூலும் பெறுதல் வேண்டும்
**யூகமுடன் தவநூலும் பெற்றவர் யாரும்** 08.

**பெற்றவர்க்கு தவவாழ்வும் ஞானமும் ஓங்கும்**
**பேசிடுவேன் இடரண்டா வாழ்வு ஓங்கி**
**உற்றதொரு அருள்சிறப்பை பெறுவார்தானே**
உவந்தளித்தேன் ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே. 09.

**.....சுபம்.....**

ஆடுநாடு தேடினும் ஆனைசேனை தேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கேவந்து நிற்குமோ?
ஓடிஇட்ட பிச்சையும் உகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல் தர்மம்வந்து நிற்குமே.

**மகான் சிவவாக்கியர் அறிவுநிலை – கவி 240**

**25.03.2003, செவ்வாய்கிழமை** அன்று திருச்சி, புத்தூர் அகத்தியர் நாடி ஜோதிடர் யுயு. தரணிபாலன் மூலம் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க நிறுவனர் குருநாதர் தவத்திரு. **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களின் தவச்சிறப்புகள் பற்றியும், வருகின்ற 16.04.2003 அன்று நடைபெறவுள்ள சித்ரா பௌர்ணமி விழா சிறப்புகள் பற்றியும் **மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய அருள்வாக்கு**

## மகான் மாணிக்கவாசகர் ஆசி காண்டம்

ஆதியந்தம் இல்லாத பரத்தைபோற்றி
அன்புகொண்ட அரங்கனுக்கு வாசன்வாக்கு
(மாணிக்கவாசகர் வாக்கு)
சோதியாய் சோதியாய் சோதியெ ஆவாய்
சுத்தமுடன் சத்தியமுடன் சொன்னவாக்கு 01.

வாக்குதான் வையகத்தில் சித்திபெற
வான்கலக்க வாசனின் ஆசியுண்டு
**தக்கதொரு தவநூல் வெளியீட்டுவிழா**
**தரணியிலே ஞானிகளே உருவாக்கும் விழாவாம்** 02.

ஆசான் மாணிக்கவாசகரின் திருவடியை யா்ா ஒருவர் பூஜிக்கிறாரோ அவர் செய்த பாவங்களெல்லாம் தீர்த்து சிறப்பறிவு தருவார். அதன் காரணமாக உடலைப்பற்றியும், உயிரைப்பற்றியும் எங்கும் நீக்கமற நின்று அருள்செய்யும் எல்லாம்வல்ல இயற்கை கடவுளைப்பற்றியும் அறிந்துகொள்ளச் செய்வார்.

சாதகன் ஆன்ம லாபம் பெற விரும்பினால் தினமும் காலை 10 நிமிடமும், மாலை 10 நிமிடமும் ஒரு தீபம் ஏற்றியும், நறுமணமுள்ள பத்தி வைத்தும் ஒரு வெண்ணிற துணியில் அமர்ந்து **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்று நாமஜெபம் தொடர்ந்து சலிக்காமல் செய்து வந்தால் எல்லா ஆகம வேதங்களை படித்து அறியமுடியாத ஆன்மிக ரகசியங்களை நாமே அறிந்துகொள்ளமுடியும். எனவே புண்ணியவானாகிய மகான் மாணிக்கவாசகர் திருவடியை பூஜிப்பதே சிறப்பறிவாகும். பக்தி செலுத்தாமல் ஆகம வேதங்களைப் படித்தால்மட்டும் என்ன உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும்? ஆகவே, பக்திதான் விடுபேறு தரும்.

விழாதன்னில் அற்புதங்கள் நீயும்காண
வையகத்தில் மேன்மைபெற விழாவும் சொன்னேன்
தாழ்வில்லா விழாதன்னில் தவநூல் வாங்கி
**தவநூலின் பொருளுணர்ந்து படிப்போரெல்லாம்** 03.

மகான் மாணிக்கவாசகர் அருளிய இந்த அரிய தவநூலை பொருளுணர்ந்து படிப்பவர்கள் உண்மைப்பொருளை அறிந்து கொள்வார்கள் என்பது சத்தியமாகும். இந்த நூலில் ஞானிகள் திருவடியை பற்றுவதற்கு உரிய மார்க்கத்தை தொகுத்து சொல்லியிருக்கிறோம். இதை ஆன்மீக அன்பர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

**படிப்போர்க்கு சன்மார்க்கம் சாகாநிலையும்**
**பக்குவங்கள் புண்ணியமும் அடைவார்திண்ணம்**
பாடவே மாணிக்கவாசகர் திருமூலரும்
பகர்ந்திட்ட நாவுக்கரசர் திருஞானசம்மந்தர் 04.

இந்த அரிய தவநூலை கருத்துடன் படித்தால் சன்மார்க்கத்தைப்பற்றியும், சாகா கல்வியைப்பற்றியும் அறிந்துகொள்ளலாம். எனவே இந்நூல் அரிய தவநூல் ஆகும்.

சம்மந்தருடன் இவர்கள்வழி பெருமானும்(வள்ளலார்)
சித்திநிலை அடைந்ததுபோல் உனக்கும் சித்திநிலை
சேமமுடன் அடைந்துமே சூட்சமம்சேரும்
செப்பவே ஓங்காரக் குடிலில் சொல்லும் 05.

மேற்கண்ட 4, 5 கவிகளில் மகான் மாணிக்கவாசகரையும், தவராஜ சக்கரவர்த்தி திருமூல தேவரையும், மகான் திருஞானசம்மந்தரையும், மகான் திருநாவுக்கரசரையும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். மேற்கண்ட ஐந்து ஞானிகளும் அருந்தவம் செய்தவர்கள். இவர்களின் நாமங்களான **ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி** என்றும், **ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி** என்றும், **ஓம் திருஞானசம்மந்தர் திருவடிகள் போற்றி** என்றும், **ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி** என்றும், **ஓம் இராமலிங்க சுவாமிகள் திருவடிகள் போற்றி** என்றும் தினமும் போற்றியும், பூஜித்தும் வந்தால் அவர்கள் செய்த பாவங்களெல்லாம் பொடிப்பொடியாகிவிடும். மேலும் மரணமில்லா பெருவாழ்வு கைகூடும் என்பது சத்தியமாகும்.

**சொல்லிவரும் மந்திரங்கள் சூட்சமம் தன்னில்**
**செகம்மாற்றம் அடைந்துமே மேன்மைகாணும்**
**உலகத்தில் யுத்தங்கள் சமாதானமாகும்**
**வையகத்தில் வளங்கள்பல செழிப்புமோங்கும்** 06.

22.03.2003 சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு ஓங்காரக்குடிலாசான் தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் **அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி** என்ற மகாமந்திரத்தை துவக்கிவைத்து தொடர்ந்து 23.03.2003 முழு நாளும், மேலும் 24.03.2003 மதியம் 1.30 மணிவரை ஆக 40 மணி நேரம் இடைவிடாது தொடர்ந்து மகாமந்திரத்தைச் சொல்லியதால் யுத்த அபாயம் நீங்கி சமாதானம் ஏற்படும் என்றும் உலகத்தில் பல்வேறு வளங்களும் செழிப்பும் உண்டாகும் என்றும் மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

ஓங்கியே உலகமக்கள் நன்மைகாண்பார்
**ஓதிட்ட யுகயுத்த சமாதானமந்திரத்தை**
இங்கிதமாய் உதயம்முதல் உச்சிவரை
(காலை 6 மணிமுதல் மதியம் 12 மணிவரை)
இயம்பியே குடில்தன்னில் சொல்லவேண்டும் 07.

சொல்லவேண்டும் மாலைஎட்டு நாழிகையும்
(மாலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரை)
சிறப்பாக உரைக்கதான் வேண்டுமப்பா
நலமாக இவைசெய்ய நன்மைகுடிலில்
நாதத்தில் உன்னோடு மாணிக்கவாசகன் 08.

7, 8 ஆம் கவிகளின் சாரம் : தினமும் ஓங்காரக்குடில் அருட்பெருஞ்ஜோதி மண்டபத்தில் காலை 6.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரையிலும், மாலை 5.00 மணியிலிருந்து இரவு 8.00 மணிவரையிலும் **அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி** என்ற மகாமந்திரத்தை ஜெபித்து வருவதால் யுத்த அபாயங்கள் நீங்கி உலகம் செழிக்கும் என்று மகான் மாணிக்கவாசகர் அருளியுள்ளார்கள்.

வாசனுமே கலந்துமே விட்டேன்யானும்
உன்மனதில் உன்னோடு ஒன்றியிருக்க
பேசநீ மெய்மொழி பொருளுணர்ந்துவிட்டாய்
பக்குவமாய் நானும்வான் கலந்ததுபோல் 09.

வான்கலக்கும் சூட்சமத்தை தம்பனிடம்
வகையாக நீகேட்டு புளகாங்கித மடைந்தாய்
மண்ணுலகில் அதைநானும் அறிந்தேன் அரங்கா
மேதினியில் சோதிமண்டபமும் தடம்தன்னில் 10.

தடம்தன்னில் நல்லவாண்டு காலில்துணிசுற்றி
தப்பில்லா பணிவோடு மந்திரம்சொல்வதை
இட்டமுடன் வள்ளலும் ஏற்றுகொண்டார்
ஏற்றமுடன் உரைத்திட்ட மூலம்தன்னை 11.

மூலமதை மகிழ்வுடனே ஏற்றுகொண்டார்
உரைக்கின்றேன் உன்தளம் இதுதானப்பா
நலமாக இனியும் தம்பன் வந்து
நற்குடிலில் இரண்டரைநாழி பேசவேண்டும் 12.

பேசவேண்டும் திங்களிருமுறை தம்பனும்தான்
பேசவேண்டும் திங்களிருமுறை நீயுமங்கே
மாசில்லா சாத்தியநூல் திருமந்திரமுனக்கு
அதன்பொருளால் காட்டிய வழிகள்தன்னால் 13.

வழிதன்னால் சன்மார்க்கத்தில் நிற்கலாச்சி
வளர்ந்தோங்கும் இனியும் சன்மார்க்கமெங்கும்
அழகாக உரைநடை நூல்தன்னை
அகிலத்தோர் உய்யவே நீஅச்சிட வேண்டும் 14.

அச்சிடவேண்டும் அதற்கு நூல்தொகுப்பை
அன்போடு தம்பனும் பாலனும் தருவார்கள்
மாசில்லா உலகமாந்தர் யாவருமே

மேன்மையோடு சன்மார்க்கத்தில் சார்ந்துநிற்க 15.

சார்ந்துநிற்க உரைநடைநூலே சான்றாகும்
சற்குருவே அதுஉன்னால்தான் முடியும்
பாருலகில் இதன்நூலை பலரும்வந்து
பதிப்பித்து உரைநடைநூலை வெளியிட்டார்கள் 16.

சார்ந்துநிற்க உன்நூலே தலைநூலாகும்
வெளியிடுவாய் உரைநடைநூல் பகுதிதன்னுள்
கள்ளமில்லா நூலுள்நாங்கள் புதைந்திருப்போம்
கருத்தோடு அந்தநூலை எல்லோரும் வணங்கி 17.

வணங்கியே துதிசெய்யும் நூலாகும்
உரைத்திட்ட இந்நூலுக்கு நிகரான
மண்ணுலகில் எந்நூலும் இனியிருக்காது
மேவிட்ட இந்நூலை வைத்திருப்போர்யாவரும் 18.

யாவருமே சர்வசித்திகளை பெறுவார்
யோகமுடன் பாக்கியமும் பெறுவார் திண்ணம்
இயம்பிட்ட அந்நூலை தன்நூலாக
மெய்யாக சித்தர்களும் சொல்லிடுவார் 19.

சொல்லிட்ட அந்நூலை அச்சிட்டு
செகத்தோர்க்கு சடுதியில் வரச்செய்யவே
நலம்பெறவே இதற்குநாங்கள் துணையிருப்போம்
நாதத்தில் வாசகன்யான் உனைவிடமாட்டேன் 20.

விடாமலே உன்னுடன் நான்கலப்பேன்
உத்தமமாய் என்னோடு நீகலப்பாய்
உள்மனதில் உன்னோடு நானிருக்க
உத்தமன் நீ வான்கலப்பது திண்ணம் 21.

திண்ணமுடன் சன்மார்க்கம் நிலைபெறுவதும் திண்ணம்
தரணியிலே உன்னால்இனி உலக்மஉய்யும்
தானழகாய் சோதிமண்டபத்தில் முன்நீயும்

திறமுடனே சோதிமந்திரம் வள்ளல் நாமமுரைக்க 22.

உரைக்கவே நாங்கள் புளகாங்கிதமடைவோம்
உரைநடைநூல் வெளியீடு பொறுப்புதன்னை
அறதொண்டன் நடராசன் பொறுப்பும் கொள்வான்
அறதொண்டன் குடிலன்பர் யாவருக்கும் 23.

யாவருக்கும் வாசனாகி என்னாளுமுண்டு (மாணிக்கவாசகர் ஆசி)
யோகம்பல பெற்றிடவும் துணையிருப்பேன்
இயம்பும்நாள் குடில்தொண்டன் செந்திலுக்கு
வெண்மையுண்டோன் ஆசியும் இருக்கமேன்மை 24.

மேன்மைபெற அரங்கனுக்கு ஆசிதந்தேன்
மண்ணுலகில் பஞ்சகீர்த்தியை (ஐந்தொழில்) நிலையுமுண்டு
இனியும் குடில்மேன்மை கருணைவாக்கு
இன்னும்சில விளக்கங்கள் அடுத்துரைப்பேனாசி முற்றே 25.

.....சுபம்.....

**குறிப்பு :** சன்மார்க்கத்தைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்றால் மகான் மாணிக்கவாசகர் திருவடியையும், ஆசான் இராமலிங்கசுவாமிகள் திருவடியையும் பூஜித்தால் சன்மார்க்கத்தைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளமுடியும்.

## அகத்தியர் சதகம்

தேவரீர் திருவடிக்கு ஆளாகவும் அட்டமா
சித்தி தந்து அருள் புரியவும்
சித்தர் கணம் எல்லாம் எனக்கு அருள் இரங்கவும்
சித்தம் வைத்து அருள் புரியவும்
பாவி அடியேன் செய்த பாவங்களெல்லாம்
பறந்தோட அருள் புரியவும்
பக்குவம் அறிந்து எனைப் பக்குவ விசேடனாய்ப்
பண்ணி வைத்து அருள் புரியவும்
நாவிட்டு உரைக்க ஒணாச் சோதி நயனத்தூடு
நடனமிட அருள் புரியவும்
நம்பினேன் ஐயனே நட்டாற்றில் என்கைகள்
நழுவிடாது அருள் புரியவும்
மாவேகமாக மெய்த தவராஜ சிங்கமே

வரவேண்டும் என்றன் அருகே
மாகுணங்குடி வாழும் என் அகத்தீசனே
மவுன தேசிக நாதனே.

**மகான் மஸ்தான் சாகிப் – அகத்தியர் சதகம் 13 வது பாடல்.**

மோட்சலாபம் அல்லது வீடுபேறு அடைய விரும்புகிறவர்கள் ஆசான் அகத்தீசர் திருவடியைப் பூஜை செய்யாமல் ஆயிரம் கோடி நூல்கள் படித்தாலும் அணுவளவும் அறிந்துகொள்ள முடியாது. ஆசான் அகத்தீசர் துணையில்லாமல் நாமாகவே முயற்சித்தால், ஒன்றைவிட்டு ஒன்றைச் செய்து நோய்வாய்ப்பட்டு இறந்து போவோம்.

மகான் மஸ்தான் அவர்கள் பல குருமார்களைத் தேடி அலைந்து உண்மைப்பொருளாகிய மெய்ப்பொருளை அடையமுடியவில்லை. ஆசான் அகத்தீசர் திருவடியைப் பூஜைசெய்துதான் அவர் தூலதேகம், காரண தேகம், சூட்சமதேகம் ஆகிய இரகசியங்களை அறிந்துகொண்டு வீடுபேறு அடைந்தார்.

ஆசான் அகத்தீசரை வேண்டும்பொழுது **பெருமைக்குரிய தலைவனே அகத்தீஸ்வரா! உன்திருவடிக்குக் கொத்தடிமையாக இருந்து தொண்டுசெய்ய அருள் செய்யவேண்டும்** என்று வேண்டுகிறார். மேலும், மனிதன் என்ன முயன்றாலும் ஆசான் அகத்தீசர் ஆசி இல்லாமல் அட்டமா சித்தியைப் (எட்டு வகை சித்திகள்) பெறமுடியாது. மேலும் ஆசான் அகத்தீசர் கட்டளை இல்லாமல் எந்த ஞானிகளும் நமக்கு அருள்செய்ய மாட்டார்கள். அகத்தீசரைப் பூஜைசெய்தால்தான் எல்லா ஞானிகளும் நமக்கு உற்ற துணையாக இருந்து அருள்செய்வார்கள். ஆசான் அகத்தீசரும், அவருடைய சீடர்களான ஞானிகளும் அருள்செய்தால் பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் எல்லாம் கதிர்கண்ட பனிபோல் விலகி ஓடும். நாம் செய்த பாவங்கள் எல்லாம் விலகி ஓடினால் பக்குவங்கள் தானே வரும். மேலும், ஆசான் அகத்தீசன் ஆசியால் பெருந்தன்மையும் உண்டாகும்.

பக்குவம் பெற்ற சாதகன்தான் ஆசான் அகத்தீசர் ஆசியோடு இடகலையையும், பிங்கலையையும் ஆசான் துணைகொண்டு ரேசித்து, பூரித்து, புருவமத்தியில் கும்பித்தால்,

அதன் காரணமாக பலகோடி கதிருக்கு ஒப்ப ஜோதி தோன்றும். ஆசான் அகத்தீசர் அந்த ஜோதியில் கலந்திருந்து நடனமிடுவார். அது சொல்லவொண்ணா ஆனந்தத்தை உண்டுபண்ணும். எனவே, சாதகன் ஆசான் அகத்தீசரை நம்பிவிட்டால் கைவிடமாட்டார். எனவே தொடர்ந்து திருவடியைப் பூஜைசெய்யவேண்டும். ஆசான் அகத்தீசரை நம்பினவர்கள் வாழ்க்கைக்கு எந்த இடையூறும் வராது.

தொடர்ந்து ஆசான் அகத்தீசரை பூஜைசெய்தால் **நினைப்பதற்கு முன்னாகி நிற்கும் ஐயன் என்றும், சிந்தையில் நினைந்தபோதே திருநடம் இட்டாய் போற்றி** என்றும் மகான் புலத்தீசர் சொல்லுவார். எனவே அகத்தீசரை நினைத்த அக்கணமே எதிரில் தோன்றி **அஞ்சேல் மகனே!** என்று அருளும் ஆற்றல் ஆசான் அகத்தீசருக்குத்தான் உண்டு.

ஆசான் அகத்தீசரை அருந்தவம் செய்ததால் தவராஜ சிங்கம் என்று ஞானிகள் போற்றுவார்கள். மாகுணங்குடி என்று சொல்லப்பட்ட உயர்ந்த மனதில் குடிகொண்டு அருள்செய்யக்கூடியவர்தான் ஆசான் அகத்தீசர் ஆவார். ஆகவே, ஆசான் அகத்தீசரைப் போற்றுவோம், ஆசிபெற்று இன்புற்று வாழ்வோம்.

அகத்தியர் துணை

## ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தின் வெளியீடுகள்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பு.
2. ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல்
3. அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள்.
4. ஞானிகள் அருளிய குருநாதரின் பூர்வஜென்ம வரலாறு.
5. பிரம்மமுனிவர் அருளிய கலிகால மாற்றங்கள்.
6. ஞானிகள் அருளிய நெறிமுறைகள்.
7. பசுவதை செய்தால் பருவமழை தவறும்.
8. சுகமான வாசியே அகத்தீசராகும்.
9. சன்மார்க்க நெறிமுறைத் திருமண விளக்கம்.
10. துன்பங்கள் தீர ஓங்காரக்குடிலுக்கு வாருங்கள்.
11. குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ, CD கேசட்டுகள்.
12. ஞானிகள் திருவுருவப் படங்கள்.

ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்யுலகை நம்பாதீர் வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்து இனி இங்கு
என் மார்க்கமும் ஒன்றாமே.

திருஅருட்பா – சுத்த சிவநிலை 41.